220

மலர் 18
இதழ் 6

ஜகன்மோகினி

220

ஆசிரியை :
வை. மு. கோதைநாயகி அம்மாள்

PHONE:
86019.

* JAGANMOHINI * MONTHLY *

தயா நிதி

55-வது நாவல் ஆரம்பம்

THE REGISTRAR OF BOOKS
14 JUL 1941
MADRAS

மற்ற முக்கிய அம்சங்கள்

பழமொழியா? நடைமொழியா?—வை. மு. கோ.
வாணியின் பிரஸாதம்—ஸுமனீஸரம்ஜனி கீர்த்தனை.
ரேடியோ டயரி—"நித்யானந்தர்."
சித்திர ரகளை—எம். சாமுவேல்.
மறக்க முடியாத நாள்—வை. மு. ஸ்ரீநிவாஸன்.
மதிப்புரை—வி. கே. சௌரிராஜன்.
அனுபவநீதிசாரம்—வை. மு. கோ.
க்ஷேமலாபங்கள்—ஆசிரியை.

தில்லை ஸ்தலம்

5 போடோ படங்கள் : : "ஸ்ரீவத்ஸன்."

3C
N21, N22 M
N41.18.6.
183053

தயா நிதி

(புதிய தொடர் நாவல் ஆரம்பம்)

அணா 2
காசு 12

ஜகன்மோகினி காரியாலயம், திருவல்லிக்கேணி, சென்னை.

தில்லை

ஸ்தலம்

●

"ஸ்ரீவத்ஸன்"

●

காபிரைட்.











வாஹினி பிக்சர்ஸ் லிமிடெட்,

43, ஆசாரப்பன் தெரு, மதராஸ்.

ஸ்ரீராமஜெயம்.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

மலர் 18	விஷு ௵ வைகாசி ௴ ஜூன் 1941	இதழ் 6

ராகம்—ரீதிகௌளை.

பல்லவி

இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா, பைங்கிளியே!
பொன்னரங்கன் புகழினையே பேசிடுவாய்ப் பல்காலும்

அனுபல்லவி

பன்னிருவர் பனுவல்களைப் பரவசமாய்ப் பாடி,
இன்னிசையின் இனிமைதனில் இறைவனையே நாடி, (இன்)

சரணம்

(1) கூட்டிலிருந்து நீ கோவிந்தா! கோவிந்தா! வென்று
ஆட்டமாடியே அகங்கரைந்து அழைத்திடில், (இன்)

(2) கடற்கிடந்த கருமணியைக் கனிந்துருகிப் பேசுவையேல்,
மடக்கிளியே! கைகூப்பி வணங்கியுனை வாழ்த்திடுவேன். (இன்)

சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணா விலையுள்ள நாவல்களை இனாமாகக் கொடுப்பதுடன் உங்களுடைய நம்பர்களும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணா நாவலுக்கு ஒரு அணா வீதம் (வெளிநாடு $1\frac{1}{2}$ அணா) தபாற்செலவுக்காக சேர்த்தனுப்பவும்.

ஆத்மசக்தி	ரூ 1 4 0	ரூ 2 (போஸ்டல் ஆர்டர் 3 ஷிலிங்) அனுப்புவோருக்கு தபாற் செலவு இனாம்.
கருணாலயம்	1 0 0	
மாதவமணி	0 4 0	

உங்கள் ஊரில்

எமக்கு ஏஜண்டு இல்லையாயின் தயவுசெய்து செல்வாக்குள்ள நியூஸ் ஏஜண்டின் விலாசத்தை நமக்குத் தெரிவித்தோ அல்லது அவர்களை நமக்கு எழுதச் செய்தோ உதவி புரியக் கோருகிறோம்.

க்ஷேமலாபங்கள்

அன்பர்களே !

தயாபரனின் அருளாலும் உங்களுடைய உதவியாலும் இந்த இதழில் மோகினி உங்களை மகிழ்விக்க 'தபாநிதி' என்கிற கதையைக் கொண்டு வருகிறாள். என்றும்போல் உங்கள் செல்வியை ஆதரிக்கவேண்டுகிறேன்.

நிற்க, க்ஷேமலாபங்கள் எழுதுவதற்கு இடமின்மையினால் இத்தனை இதழ்களில் விடுபட்டிருந்ததற்கு மன்னிக்கவும். அனேகம்பேர்கள் தம்தம் அபிப்ராயங்களை எழுதிப் பதிலும் விரும்பியிருக்கிறார்கள். ஆனால் அவைகளுக்கெல்லாம் பதில் எழுதுவதென்றால் புத்தகம் புத்தகமாகவிருப்பினும் போதாது. முக்யமான சிலவற்றிற்குமட்டும் இங்கு பதில் தருகிறேன்.

சில மாதங்களுக்கு முன்பு, ஒரு முஸ்லீம் அன்பர் இப்படி எழுதினார். "நெடுநாளாக என் இதயத்தில் தங்களுக்கு எழுதும்படியாகத் தூண்டிக் கொண்டிருந்த (ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்கான) செய்தியை, திடீரென எதிர்பாராவண்ணம் கடந்த நவம்பர் மீ சஞ்சிகையில் கண்டு, நான் நினைத்த செய்தி வெற்றி பெற்றதை முன்னிட்டு அளவில்லா மகிழ்ச்சி அடைந்தேன். மோகினிக்கு நீண்ட ஆயுளையும், நிறைந்த செல்வத்தையும் நற்கீர்த்தியையும் கிடைக்க எல்லாம் வல்ல இயற்கையைபெரிதும் இறைஞ்சுகின்றேன்..." (28-12-40 பினங்கு.)

ஒரு கிருஸ்துவ சகோதரியும், மகம்மதிய சகோதரியும் "எங்கள் மதத்தைப்பற்றியும், எங்கள் ஜாதியை வைத்தும், ஒரு கதை எழுதக் கூடாதா! நீங்கள் தான் சர்வமதத்தையும் சம்மதமாகப் பேசக்கூடியவர்களாயிற்றே" என்று எழுதியிருக்கிறார்கள்.

ஒரு ஸ்மார்த்த ப்ராம்மணர். "எப்போதும் விஷ்ணுமதத்தையும் விஷ்ணுவையுமே கொண்டாடி எழுதுகிறீர்களே! பூராவும் சைவ மதத்தைப்பற்றி ஏன் எழுதக்கூடாது?" என்று எழுதியிருக்கிறார் அதே ஜாதியைச் சார்ந்த மற்றொருவர், "அனேகமாக எங்க ஜாதியைப்பற்றியே எழுதி படமும் போடுகிறீர்களே! ஏன் உங்கள் ஜாதியைப்பற்றி எழுதிப் படம்போடக் கூடாது?" என்று சற்று கடுமையாகவே எழுதியிருக்கிறார். இன்னும் சில பெரியவர்கள், "அம்மணீ! எந்த ஜாதியையும் குறித்தும் அடைப்பெயர் ஒன்றும் வைக்காமல் பொதுவான விஷயங்களைப்பற்றித் தாங்கள் எழுதிக் கொண்டுபோவதுபற்றி மெத்த சந்தோஷப்படுகிறோம்" என்று எழுதியிருக்கிறார்கள்.

இன்னொரு அன்பர் எழுதியிருப்பதுதான் எனக்கு வியப்பிலும் வியப்பாகவிருக்கிறது. அதாவது "நீங்கள் எல்லாம் கற்பனையாய் வாழ்க்கையின் சித்திரமாகவே எழுதுகிறீர்களே! அழகான இங்கிலீஷ் நாவலிலிருந்து திடுக்கிடும் சம்பவங்கள், ப்ரமிப்பு,...காதல்...முதலியவற்றை ஏன் கையாளக் கூடாது ? ஏன் இங்கிலீஷ் நாவலையே மொழிபெயர்க்கக்கூடாது? நம் குடும்பத்துக் கதையே ஏன் எழுதவேண்டும்?" என்கிறார். இந்த அன்பரின் கடிதம் உங்களைக்கூட வியக்கச் செய்யும் என்றுதான் நினைக்கிறேன்.

"என்னுடைய 19-வது வயதிலிருந்து 52 வயது வரையில் ஓடி ஓடி உழைத்துவிட்டுப் பிறகு பிஞ்சன் வாங்கிக்கொண்டு வீட்டில் உட்கார்ந்த பிறகு, ஏதோ பொழுதுபோக்கிற்காக ஒரு புத்தகத்தைத் தற்செயலாகப் பார்த்தேன். "இது எந்த இங்கிலீஷின் மொழிபெயர்ப்போ!" என்று போட்டு விட்டேன். கற்பனைச் சித்திரமென்று எழுதியிருந்ததைப்பார்த்ததும் படிக்க வாரம்பித்தேன், என்னை முற்றிலும் ப்ரமிக்கச் செய்த வாழ்க்கையின் உண்

மைச் சித்திரத்தைக் கண்டு பூரித்தேன். பிறகு தொடர்ச்சியாக பல புத்தகங்கள் படித்தேன். ஆங்கிலவாடை இல்லாததே எனக்குப் பரம ப்ரீதியாயிருக்கிறது. நம் சமூகத்திற்கு வேண்டிய பல விஷயங்களையும் பற்றி எழுதும்படிக் கேட்டுக்கொள்கிறேன்'' என்று ஒரு பெரியவர் எழுதியிருக்கிறார்.

ஒரு சகோதரி ''நான் எனது பதினாறுவது பிராயத்தில் தங்களுடைய அரிய புத்தகங்களை வாசிக்கத் துவங்கினேன். அதுமுதல் எனது மூர்க்க குணம் மாறி பல அரிய உணர்ச்சிகளையும் உண்டாக்கி என்னை ஒரு புது மனுஷியாக்கிவிட்டது...தாங்கள் இன்னும் பல அரிய புத்தகங்களை எழுதி இருளடைந்த இருதயங்களில் பிரகாசத்தையுண்டாக்குமாறு கிருஷ்ணன் கிருபை புரியுமாறு பிரார்த்திக்கிறேன்...'' (5-1-41 பண்டிங்.)

ஒரு சிறுவர் ''நான் சிறிது காலத்திற்குமுன் ஜனங்கள் மிகவும் ஏசும்படியாயும், தான் என்ற கர்வத்துடனும் வாழ்ந்துவந்தேன். நான் தங்களது நாவல்களில் சிலவற்றைப் படித்தேன். அதனால் தங்கள் நாவலின் சக்தி என்னைப் புதியவனாக்கிவிட்டது'' (9-2-41 புதுக்கோட்டை.)

என்றும் இவைபோல் இன்னும் எத்தனையோ கடிதங்கள் வந்திருக்கின்றன.

நேயர்களே! கடிதங்கள் எப்படி இருக்கின்றன? இச்சமயம் எனக்கோர் பழங்கதைதான் நினைவிற்கு வருகிறது. ஒரு தகப்பன் தன்னுடைய இரண்டு புதல்விகளையும் பார்க்கப் பெண்கள் வீட்டிற்குப் போனான். மூத்த மகள் தந்தையை வரவேற்று உபசரித்து ''எனக்கொரு குறைவும் இல்லை. மழை கொஞ்சம் பெய்துவிட்டால் விளைவுக்குப் பஞ்சமேஇல்லை. மழையைத்தான் எதிர்பார்க்கிறேன். நீங்கள் மழை வருவதற்குப் பிரார்த்தனை செய்யுங்கள்'' என்றாள். சிறியவள் வீட்டிற்குச்சென்று க்ஷேமம் விசாரித்தற்கு அவள் 'எனக்கொரு குறைவும் இல்லை. செங்கல் சூளைபோட்டுவிட்டோம். மானம் மழைபெய்யாதிருந்தால் ஆயிரக்கணக்கில் பணம் சொறிந்துவிடும். மழைவராதிருக்கும்படி ஈசனை வேண்டுங்கள்.' என்றாளாம். அந்த தகப்பனின் நிலைமை எப்படியிருக்கும்? ஒரு பெண்ணுக்காக வேண்டுவதா! ஒரு பெண்ணுக்காக வேண்டாமென்று சபிப்பதா! என்னசெய்வது? கிழவனும், கழுதையும் என்கிற கதையும் எல்லோரும் அறிந்ததே.

உலகம் பலவிதம். ஒவ்வொருவருடைய உணர்ச்சி ஒவ்வொருவிதமாகவிருக்கின்றது. எல்லாவற்றையும் அப்படியே த்ருப்திசெய்ய சாத்யமாகுமா! கூடுமானவரையில் த்ருப்திசெய்ய எப்போதும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஆங்கில மொழிபெயர்ப்பை விரும்பும் நேயரின் விருப்பத்தை என் ஜென்மாவிலேயே திருப்திசெய்யமுடியாது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடிமை நாட்டிலுள்ள நமக்கு பல அம்சங்களிலும் அடிமைப்புத்தி இருப்பது போதாதா! கதையிலும்கூட மற்றவர்களுடையதைத் திருடியும், மொழிபெயர்த்தும் சுதந்திரமாக எழும் கற்பனைக்கு மதிப்புக்கொடுக்காது வாழவேண்டுமா? அந்தத் தொழிலுக்கு எத்தனையோ பேர் காத்திருந்து அத்திருப்பணியைச் செய்கிறார்கள். ஏராளமான தாய்ப்பால் உள்ள குழந்தைக்கு, தாயின்பால் ருசியும் ஆரோக்கியம் அளிக்குமா? புட்டிப்பால் அளிக்குமா?

முஸ்லீம் சகோதரியும் கிருஸ்தவ சகோதரியும் எழுதியிருப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன். எனக்கும் அம்மாதிரி எழுதவேண்டுமென்று மிக்க ஆசைதான். ஆனால் எந்தஜாதியைப்பற்றிக் கதையோ, கட்டுரையோ எழுதத் துடங்கினாலும் அந்தந்த ஜாதியைப்பற்றிய சகல விஷயங்களும், நுட்பங்களும், பழக்கவழக்கங்களும், நன்றாகத் தெரிந்தால்தான் அதைப்

பற்றி எழுதுவது உசிதம். அப்போதுதான் அழகாயுமிருக்கும். அம்மாதிரியான விஷயங்கள் எனக்கு முற்றிலும் தெரியாததனால் ஆங்காங்குமட்டும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடிச் சேர்த்து எழுதுகிறேன். முஸ்லீம் அன்பரின் சந்தோஷத்திற்கு நமது "சந்தோஷ மலர்" உரித்தாகியதுபற்றி மிக்க சந்தோஷம்.

நிற்க, வைஷ்ணவர்கள், சைவர்கள். என்கிற வித்தியாஸமோ ஒன்றைத்தாக்கியோ, குறைகூறியோ எழுதும் கருத்தோ எனக்குச் சிறிதுகூட இல்லை. இன்னொரு நண்பர் எழுதியிருப்பதுபோல் ஜாதியைக் குறிக்காமலேயே நமது பெரும்பான்மையான நாவல்கள் வெளியாகியிருப்பது நேயர்கள் அறிந்தவிஷயம். முக்கியமாக நமது தேசத்திற்கும் சமூகத்திற்கும் மக்களின் வாழ்க்கைக்கும் இன்றியமையாத பல அம்சங்களைக்குறித்துக் கதாபாத்திரங்களின் மூலம் விளக்கிச்சேவைபுரிவதே எமது நோக்கமாகும். அம்முறையிலேயே 'மோகினி' தனது ஊழியத்தைச் செய்துவருகிறாள்.

உங்கள் நன்றியுள்ள,

வை. மு. கோதைநாயகி.



(வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A., B.L.,)

நித்யானந்தர்:—வரணும். வரணும். சர்மாஜீ! நமஸ்காரம்.

லாவான்ய சர்மா:—சௌக்கியந்தானே! கோடைக்கு எங்கும் போகவில்லையா?

நி:— இருப்பிடம் வைகுண்டம் வேங்கடம் என்று இங்கேயே இருப்பதாகத்தீர்மானித்துவிட்டேன். ஒருவேளை அடுத்தமாதம் எங்காவது திடீரென்று கிளம்பினாலும் கிளம்பலாம்.

லா:—நான் முழுதும் வீட்டிலேயே உட்கார்ந்திருந்தால் போது போவது கஷ்டமாயில்லையா?

நி:—ரேடியோவும், பத்திரிகைகளும் இருக்கையில் கஷ்டமென்ன? அவை உதவாத சமயம் நித்திராதேவி அருள் புரிகிறாள்!

லா:—அப்படியென்றால் நல்லது, கெட்டது, கேட்கக்கூடியது, அடாஸ் எல்லா நிகழ்ச்சிகளையும் விடாமல் கேட்டுக்கொண்டே இருக்கிறீரா?

நி:—பிடிக்காதபோது "ஸ்விட்ச் ஆப்" பண்ணுவது தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

லா:—சென்ற மாத நிகழ்ச்சிகள் எப்படி? த்ருப்திகரமா! அல்லது...

நி:—முழுதும் த்ருப்திகரமாகவிருக்க முடியுமா? மனித ஸ்வபாவமே அப்படி இல்லையே. கூடிய வரையில் பல அம்சங்களில் த்ருப்திகரமாகவே நிகழ்ச்சிகள் அமைந்தன.

லா:—புதிய அம்சங்கள், அபிவிருத்திகள் உண்டோ?

நி:—ஆகா! திருச்சி நிலையத்தில் "கோடைக் கல்வி" என்றொரு நிகழ்ச்சி சனி, ஞாயிறு தவிர மற்ற

தினங்களில் சுமார் அரைமணி ஒலி பரப்புகிறார்கள். இந்த நிகழ்ச்சி பலருக்கு பயன் தரக்கூடியதாக விருக்கிறது. ஆங்கிலப் பயிற்சி, சங்கீத பாடம், சிறிய சொற்பொழிவு முதலியவைதான் ஷை நிகழ்ச்சியின் அம்சங்கள். அரை குறையாகச் சிறிது ஆங்கிலம் தெரிந்தவர்கள் இந்த ஆங்கிலப் பயிற்சியைக் கேட்டு அபிவிருத்தி செய்துகொள்ளலாம். அடியோடு ஆங்கிலமே தெரியாதவர்களுக்கு இந்த அப்பியாசம் அவ்வளவாகப் பயன்தராது. சங்கீதப் பகுதியில் தினமும் ஒரு ராகத்தை எடுத்து அதன் சாயை, பாவங்களைப் பாடிக் காட்டி, உதாரணத்திற்கு அந்த ராகத்திலுள்ள ஒருபாட்டை (இசைத் தட்டை) ஒலிபரப்புகிறார்கள். இந்த முறை மிகவும் நன்றாயிருக்கிறது. விஞ்ஞானம், இலக்கியம், கலை, பெண்கல்வி முதலிய பல விஷயங்களைப்பற்றி குட்டி பிரஸங்கங்களும் ஒலிபரப்பப்படுகின்றன.

லா:—பேஷ். ரேடியோவினால் எவ்வளவு உபயோகம் பார்த்தீரா!

நி:—இது மாத்திரமா? இன்னொரு விஷயம் சொல்கிறேன் கேளும். ஷை நிலயத்தில் வாத்திய கோஷ்டியினர் பல அபூர்வ ராகங்களை வெளிக்கிளப்பி வருகிறார்கள். கேட்டிராத பெயர்களெல்லாம் தினமும் கிளம்புகின்றன. சிலவற்றைக் குறிப்பிடுகிறேன் பாரும். பூர்வ பரஜ், பானுகீரவாணி, ஹம்ஸநாராயணி, சந்த்ரிககௌள, கனக ரஸாளி, கௌமாரி, தபஸ்வினி, சாயாகௌள, கனகலங்காரி, கன்னட மாருவா, திருமூர்த்தி, நாகதீபம், பிரவாளஜோதி, சுநாதப்ரியா, கனக பூஷாவணி, அமரஸேவப்ரியா, நவரத்ன விலாஸம், விம்ஹஸ்வரூபிணி, நாக பூபாளம், பாலசந்த்ரிகா, ஹம்ஸகமணி, தீபகம், கர்ணரஞ்சனி.

லா:—ஏதேது? ஹனுமார் வால் மாதிரி விஸ்டு வளர்ந்துகொண்டே போகிறதே. இத்தனை ராகங்களையும் விஸ்தாரமாக ஆலாபனை செய்தார்களா?

நி:—அப்படிச் செய்திருந்தால் இன்னும் அழகாக சோபித்திருக்குமே. ஷை ராகங்களில் உருப்படிகளை வாசித்தார்கள். சிலவற்றைக் கேட்டேன். அபூர்வ ராகங்களைப் புதுப்பிக்கையில் ஆரோஹண அவரோஹண முறைகளையும், விசேஷ அம்சங்களையும் நன்றாக மனதில் படும்படி எடுத்துக்காட்டி பிறகு உருப்படிகளை வாசித்தால் நன்றாக அனுபவித்து ரஸிக்கமுடியும். கோஷ்டிவாத்தியத்துடன் ஒருவர் கூட வாய்ப்பாட்டு பாடினால் நன்றாயிருக்கும்.

லா:—வாஸ்தவந்தான். அபூர்வ ராகங்களை வாசிப்பதன் நோக்கம் எல்லோரிடையேயும் அவை சகஜமாகப் பழகவேண்டுமென்பது தானே. அதற்கு நீர் சொல்லும் முறைதான் மிகவும் ஏற்றது. மற்றபடி என்ன விசேஷம்?

நி:—அபூர்வ ராகங்களுக்குப் புத்துயிரளிப்பதுபோல நாட்டுப்பாட்டுகளுக்கும் முக்கியத்வம் கொடுக்கப்பட்டது. திருச்சியில் சென்ற 14வருஷம் பரம்பரையாய் வளர்ந்து வந்து தற்காலம் மங்கிக் கிடக்கும் நாட்டுப் பாட்டுகள் சிலவற்றை ஒலிபரப்பினார்கள். அவற்றைக் கேட்கையில் கிராமத்தில் பெரிய ஆலமரத்தடியில் நேரில் கேட்பது போலிருந்தது. அதேமாதிரி காமாக்ஷி கீதம் என்ற அழகிய இசைச் சித்திரம் மிகவும் ரஸிக்கத்தக்கதாயிருந்தது. முக்கியமாகக் கலியாணம், ஊஞ்சல், கிராம பூஜை முதலிய காட்சிகள் நம் கண்முன்பு தோன்றுவனபோலிருந்தன.

லா:—ஒலிமலரைப்பற்றி சென்ற தரம் வெகுவாகப் புகழ்ந்தீரே, இம்முறை ஏன் இன்னும் அதைப்பற்றி குறிப்பிடவே இல்லை?

நி:—கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா அடித்துக்கொண்டு போய்

விடும்? அவ்வளவு அவசரப்படுகிறீரே. ஒலிமலரை ரஸிக்கையில் நமது கூட்டத்திடையே ஏற்பட்ட ஒலியில் சுவரே பிளந்துவிடும்போலல்லவா ஆகிவிட்டது. முக்கியமாக 4வ மலரில் "எங்கூர் எக்ஸ்ப்ரஸ்" என்ற கற்பனையும், 11வ மலரில் நாடகமேடை சித்திரமும் வெகுவாக ரஸித்தோம். காலரி கனவான்களின் "உள்ளே போ" கலாட்டாவும், நடிகமணிகளின் பொருத்தமற்ற பாடல்களும் தத்ரூபமாகவிருந்தன. சிரித்து வயிறு புண்ணாகிவிட்டது. வக்கீல் ஐயா செய்த முடிவுரையில் "இது ஒரு ஜனநாயகம். இதில் எல்லோருக்கும் பேசவும், கத்தவும் உரிமை உண்டு. ரஸிக சிகாமணி காலிப்ரபு-இல்லே; காலரிப்ரபுக்களே!-சாரீரப்ரயோகம் நன்றாக செய்யுங்கள்"என்று கூறியது மிகபொருத்தமாயிருந்தது.

லா:—சபாஷ்! சரியான போடு தான் போட்டார். வாழைப்பழத்தில் ஊசியை அப்படியல்லவா ஏற்ற வேண்டும்!...வேறென்ன விசேஷம்?

நி:—"மூன்று விதம் ஒரே கதை" என்ற நிகழ்ச்சியை மிகவும் ரஸித்தேன். இம்மாதிரி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி திருச்சி புகழுரைகள் பெறுவது ஆச்சரியமே யில்லே. ஏனெனில் நிகழ்ச்சிகளை நிறுவுவதில் அந்நிலேயத்தில் மிகுந்த சிரத்தையும், ஊக்கமும், புத்தி சாதுர்யமும் காட்டுகிறார்கள். "கண்டதும் காதல்" என்ற ஒரே நிகழ்ச்சி ரேடியோவில் ஒலிபரப்பும்போது ஒருவிதமாகவும், நாடகமேடையில் நடிக்கும்போது வேறு விதமாகவும், திரையில் தோன்றும் போது மற்றும் வேறொரு விதமாகவும் இருக்குமென்பதை நன்கு சித்திரித்துக் காட்டினார்கள். நல்ல கற்பனையும், விமர்சன சக்தியும் திறமையும் ததும்பியிருந்தன.

லா:—இது நல்ல முன்யோசனையையும்அனுபவஞானத்தையுமல்லவா காட்டுகிறது.

நி:—திருச்சியில் ப்ரஸங்கங்களிலும் இப்போது புதிய தொடர் ஏற்படுத்தியிருக்கிறார்கள். "நான் தான் சொன்னேனே—அப்பவே சொன்னேனே" என்ற தொடரில் ஹாஸ்ய எழுத்தாளர் இருவர் பேசினார்கள். வி. ஹி. கோபாலரத்தினம் (4வ) தினசரி க்ளப் வாழ்க்கையில் இந்த "அப்பவே சொன்னேனே" என்ற வார்த்தை எத்தனே சந்தர்ப்பங்களில் வெளியாகின்றதென்பதை ஹாஸ்ய ரஸம் ததும்ப எடுத்துக் காட்டினர். அதேமாதிரி எஸ். வி. விஜயராகவாசாரியார்(25வ) தினசரிவீட்டில்இந்த "நான் தான் சொன்னேனே" எப்படி அடிபடுகிறது என்பதைப்பல உதாரணங்களுடன் எடுத்துக்காட்டினர்.

லா:—இம்மாதிரி பிரஸங்கங்கள் அடிக்கடி ஒலிபரப்பிக்கொண்டேயிருந்தால் ரேடியோ ரஸிகர்களுக்கு என்ன குறைவு?

நி:—சட்டச் சுருக்கம் என்ற புதிய தொடரும் (தி) ஆரம்பித்திருக்கிறார்கள். பாமர மனிதனும் சட்டத்தின் திட்டங்களை ஓரளவு அறியவேண்டுமென்பதும், எப்படி நமது தினசரி வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்தின் பின்னணியிலும் சட்டம் வேலே செய்கிறது என்பதை எல்லோரும் உணரவேண்டுமென்பதும் இந்தபிரசங்கங்களின் நோக்கம்.

லா:—அப்படியல்லவா செய்ய வேண்டும். பொது நன்மைக்கும், பொதுஜன அறிவு வளர்ச்சிக்கும் உகந்த முறையில் பலவிதத்திலும் தொண்டு புரிவதல்லவா ஒலிபரப்பு நிலேயத்தின் கடமை. இவ்விஷயத்தில் திருச்சிநிலேயம்இவ்வளவுஊக்கம் காட்டுவதைமிகவும் பாராட்டவேண்டியதுதான் கச்சேரிகள் எப்படி?

நி:—பல மாதங்கள் கழித்து செம்மங்குடி திரும்பிவந்து வட்டியும் முதலுமாகச் சேர்த்து பிரமாதமாகப் பாடினர். சென்னே நிலேயத்தில் இதுவரை அம்மாதிரி கச்சேரி கேட்டதே

இல்லை. இருவர் பிடில், மிருதங்கம், கடம் முதலிய பக்கவாத்தியங்களுடன் சீவாதி திருநாள் கீர்த்தனைகள் சிலவற்றை அற்புதமாகப் பாடினார். கேட்டுக் கேட்டு அலுத்துப் போன கல்யாணி, பிலஹரி, தோடி ராகங்களை விசேஷ ஜீவனுடன்பாடினார். மற்றபடி பல பிரபலஸ்தர்களின் கச்சேரிகள் விசேஷமாயிருந்தன. குமாரி அனந்தலக்ஷ்மி (தி 17வ), ருக்மிணி ராஜகோபாலன் (ம 19) நன்றாகப் பாடினார்கள். ஒரு வேடிக்கையைச் சொல்ல மறந்து விட்டேனே. தியாகராஜ பாகவதர் (26வ) கச்சேரியில் மோகன ராகப் பாட்டிற்கு சங்கராபரணம் ஆலாபனை ஆரம்பித்தார். "வழி தப்பிவிட்டீரே ஐயா" என்று குருராஜப்பா சுட்டிக்காட்டி மோகனம் செல்லும் பாதையைக்காட்டினார். பிறகு சிறிது மோகனத்தைஇழுத்துவிட்டுஉடனே பாட்டை ஆரம்பித்து விட்டார். அடுத்த உருப்படி ராகமாலிகை. தனக்கு சங்கராபரணம், மோகனம் இரண்டும் நன்றாகப் பாடத்தெரியும் என்று காட்டுவதற்காக அவ்விரண்டையும் ராகமாலிகையில் சேர்த்தார். அதன் பிறகுதான் நிம்மதி ஏற்பட்டது போலும்!

லா:— எப்படி ஏமாந்துவிட்டாரோ...பாவம்!......சரி. நாடகங்களைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே. நேரமாகிவிட்டதே.

நி:—ஏன் இப்படி அவசரப்படுகிறீர். "ஏகலைவன்" (தி. 15), "ஆற்றங்கரைப் பிள்ளையார்" (தி 14) "மேஹர்-உன்-னிஸா" (தி 26) முதலிய மூன்று சிறு நாடகங்களையும் முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். உயர்தர நடிப்பு. விருவிருப்பான நடை. மிகவும் ரஸிக்கத்தக்கனவாயிருந்தன. "வள்ளி திருமணம்" (ம 26) என்ற 'இசைச் சித்திரத்தில்' வள்ளி "தாங்கள் யாரென்று அறியலாமோ" வென்று பீரங்கிக் குரலுடன் வெகு விநயத்துடன் கேட்கிறாள். அதற்குப் பதில் சொல்ல ச்ருதி சேர்த்துக்கொண்டு "நாராத முனி"...யென்று காட்டுக் கத்தல் போடுகிறார் நாரதர். நாரும் முனியும் நாராதமுனியும், இந்த கூச்சலும் நமக்கு வேண்டாம் இந்த அஸ்தமன வேளையில் என்று வேறு ஊருக்குத் திருப்பலானேன்.

லா:—அதைவிடவேறென்ன வழி இருக்கிறது!

நி:—அஞ்சல் விஷயத்தில் திரும்பியும் அதிருப்திகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யர், சித்தூர் சுப்ரமணிய பிள்ளை, மைசூர் ராஜா ஐயங்கார் போன்ற பிரபல வித்வான்கள் ஒரு நிலையத்தில் கச்சேரி செய்யும்போது மற்றொரு நிலையத்தில் போட்டி கச்சேரி ஒலிபரப்புவது முதன் முதலிருந்த பழய நிலைமைக்குத் திரும்புவதுபோலல்லவா ஆகிவிட்டது!

லா: - இந்தவிஷயத்தில்ஒருகொள்கையும், இரு நிலையங்களிடையேயும் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம்.

❊ கருத்துரை

ஹே கருடவாகனா! பேதையாகிய என்னைக் காக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். ஸ்ரீ வேணுவை கரத்தில் கொண்ட கோபாலா! ஆச்ரயித்தவர்களைப் பரிபாலனம் செய்யும் அமலா! தேவகியின் ப்ரியமான குமாரா! ஸ்ரீ ருக்மிணியின் ப்ராணநாதா!

ராமகிருஷ்ணாதி அவதாரங்கள் செய்து அரக்கர்களையெல்லாம் ஹதம் செய்த ஆயாஸத்தினாலும், சந்திரவதனத்தைப் பழிக்கும் ஸ்ரீதேவியுடன் சந்தோஷமாகவிருக்கும் ஆனந்தத்தினாலும் என் வேண்டுகோளைக் கவனிக்கவில்லையா! இவ்வுலகத்தையே பரிபாலிக்கும் கோதாநாயகா! என்னை உபயோகமற்றவள், சிறியவள் என்று அலக்ஷியமாய் பராமுகமாயிருக்கிறாயா?

மறக்க முடியாத நாள்

(வை. மு. ஸ்ரீநிவாஸன், அட்வோகேட்.)

உண்மையில் அந்த நாளை மறக்கவே முடியாது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சில சம்பவங்கள் என்றென்றும் மறக்கமுடியாதவாறு நிகழ்கின்றனவல்லவா? அதேபோலதான் அன்றைய தினத்தில் எனக்கேற்பட்ட அனுபவம். அன்று சில மணிநேரத்திற்குள் நான் அடைந்த ஆனந்தத்தை என்னென்று சொல்வது! இதுவரை பார்த்திராதப் புனித க்ஷேத்திரத்தைக் கண் குளிரக் கண்டேன். பக்திப் பரவசத்திலாழ்ந்தேன். தவிர உண்மையான அன்பின் உயரிய நிலையையும், ஆப்த நண்பரின் உத்தம குணத்தையும் பிரத்யக்ஷமாகக் காணும் சந்தர்ப்பமும்ஏற்பட்டது.அதுவும் தவிர உங்களுக்காகவும் ஒருகாரியம் செய்யமுடிந்தது. இவ்வாறாக பல துறைகளிலும் அன்று எனக்கு ஏற்பட்ட த்ருப்தியை உங்களுக்குச் சொன்னால்தானே எனக்கும்த்ருப்தி?

* * * *

"தில்லையம்பலஸ்தல மொன்றிருக்குதாம். அதைக்கண்ட பேர்க்கு ஜனன மரண பிணியைப் போக்குதாம்" என்ற பாட்டை கேட்டிராதவரே இருக்கமாட்டார்கள். ஆனால் அந்த ஸ்தலத்தைப் பார்க்காதவர் பலர் இருக்கலாம். நானும் சமீப காலம் வரை பார்த்ததில்லை. நான் முதன் முதலாக ஷை க்ஷேத்திரத்தைப் பார்த்ததும், அதை இன்னும் பார்க்கும் பாக்கியம் பெறாதவர்களுக்கு அதைப்பற்றி ஒரு அளவு தெரியப் படுத்தவேண்டு மென்ற உணர்ச்சி உண்டாயிற்று. அதற்கு சிறந்த சாதனம் படம் பிடிப்பதே யல்லவா? "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்று சொல்வது வழக்க மில்லையா? இவ்விதழின் உள்ளட்டையில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஐந்து தோற்றங்களை பாருங்கள். அவைகளைப்பற்றி விவரமாகப் பிறகு கூறுகிறேன்.

* * * *

முதலில் ஆரம்பித்ததைச் சொல்லாமல் விட்டுவிட்டேனே! அன்றைய எதிர் பாராத அனுபவத்தைச் சுருங்கச் சொல்லுகிறேன். காலை 6 மணி இருக்கும். ரயில் மாயவரத்தைத் தாண்டி சென்னையை நோக்கி வந்துகொண்டிருந்தது. எந்த ஊரிலும் இறங்குவதாக எனக்கும் எனது நண்பர் ஸ்வாமிக்கும் உத்தேசமில்லை "நேரே சென்னைக்குத் திரும்பிவிட வேண்டும். மறுதினம் அவசரஜோலி யிருக்கிறது" என்று தீர்மானித்திருந்தோம். அப்போது ஒரு ஏழை "தில்லைச் சிதம்பரம் என்று சொல்லத் தொடங்கினால்" என்று ஆரம்பித்து பாடிக்கொண்டேதன் தொழிலாகியயாசகத்தைசெய்துகொண்டே வந்தான். அப்போது அருகிலிருந்தவர் "என்ன சார்! சிதம்பரத்துக்கு போகிறீர்போலயா?" என்று மிகவும் பழகினவர் மாதிரி கேட்டார். நமது சமூகத்தில் முன்பின் தெரியாதவர்களுடனும் சகஜமாகப் பேசிப் பழகுவது சர்வசாதாரணமல்லவா? அவரிடம் நாங்களிருவரும் நேரே சென்னைக்குச் செல்வதாகத் தெரிவித்தோம் உடனே அவர் "இந்த எல்லையை மெறித்துவிட்டு ஊருக்குள் சென்று ஸ்வாமி தரிசனம் செய்யாமல் செல்வதா முறை? கட்டாயம் இறங்கி பகவானை தரிசித்துவிட்டு அடுத்த வண்டியிலேயே போய் விடுங்கள் சார்! 11 மணிக் குள்ளாகவே அடுத்தவண்டி இருக்கிறது. இப்படி நல்ல சந்தர்ப்பத்தைக் கைவிடக்கூடாது. உங்களுக்கென்ன இதனால் செலவா? நஷ்டமா? இதே டிக்கட்டுடன் இறங்கி ஏறலாம்" என்று அவர் சொல்கையில் எங்களிருவருக்கும்

சற்று சபலம் ஏற்பட்டது. ரயிலும் சீயாழியைத் தாண்டி சிதம்பரத்தை நோக்கிவந்துகொண்டே இருந்தது. நாங்கள் யோசனை செய்வதைப் பார்த்து தானே மேலும் பேசலானார். "நீங்கள் வீரசைவவாளாயினும் சரி! வீர வைஷ்ணவாளாயினும் சரி! அல்லது பேத புத்தியும் குறுகிய நோக்கமும் இல்லாதவராயினும் சரி! எப்படியிருந்தாலும்உங்களுக்கு உண்மையில் ஆனந்த தரிசனம் கிடைக்கும். நீங்கள் யோசனையே செய்ய வேண்டாம். நல்ல வழியை நாலு பேருக்குக் காண்பித்தால் நமக்குப் புண்ணியமுண்டு என்று நான் இவ்வளவுதூரம் உங்களுக்கு எடுத்துச் சொன்னேன். எனக்குத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று கிடையாது. எல்லோரும் ஒரே தாயின் மக்கள்தான் என்று நம் தேசத்தவரை நான் எண்ணுவது வழக்கம்" என்று மூச்சுவிடாமல் சொல்லிமுடித்தார். உண்மையில் அதற்குமேல் நாங்கள் யோசிக்க வேண்டியது ஒன்றே ஒன்றுதான்! "சிதம்பரத்திற்கு எப்போது ரயில் போய் சேரும்?" என்று புத்தகத்தை எடுத்துப் பார்க்கலானேன். தனக்குக் கட்டாயம் புண்ணியம் வந்துவிட்டது என்பதை அவர் ஒரு நொடியில் அறிந்துகொண்டு 'இதோ! இன்னும் சில நிமிடங்களில் சிதம்பரம் வந்துவிடும்" என்றார். இவ்வளவு நல்லெண்ணத்துடன் எங்களுக்கு நல்வழியைக் காட்டியதற்காக வந்தனம் தெரிவித்தோம்.

* * * *

சிதம்பரம் வந்து இறங்கினோம். அங்குள்ள நண்பரின் விலாஸம் நினைவிற்கு வந்தது. "வாயிலிருக்கிறது வழி" என்றார் நண்பர் ஸ்வாமி. "நமக்குக் கண்ணெங்கே போய்விட்டது? நாமே கண்டுபிடித்து விடுவோம். புதுத் தெருதானே?" என்றேன். அவர் சிரித்துக்கொண்டே பேசாமல் பின் தொடர்ந்தார். எந்தத் தெருவைப்பார்த்தாலும் பழய தெருவாகவே இருந்தது. என்னைக் குத்திக் காட்டுவதுபோல ஸ்வாமி அரைச் சிரிப்பு சிரித்துக்கொண்டே, "வாயைத் திறக்காமல் தெருத் தெருவாய் சுற்றிக்கொண்டிருந்தால் நமது திட்டம் எகிறிப்போய்விடும். இன்று ஊர் போய்ச் சேரமுடியாது. நான் தான் சொன்னேனே 'வாயிலிருக்கிறது வழி' என்று நீர் வேண்டுமானால் மௌனவிரதம் சாதியும். நான் அதோ செல்லும் பெரியவரைக் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே பதிலையும்எதிர்பார்க்காமல்அப்பெரியவரை அணுகி விசாரித்தார். "நேரே வடக்கே சென்று கிழக்கே திரும்பி, திரும்பவும் வடக்கே சென்று, திரும்பவும் கிழக்கே செல்லுங்கள். அது தான் புதுத்தெரு. அங்கே யாரைப் பார்க்கணமோ?" என்றார் அவர். எங்கள் நண்பரின் பெயரைச் சொன்னதும் "ஓ! அவர் வீட்டிற்குத்தானா! தங்கமானவராயிற்றே. இப்போது தான் அரை மணிக்கு முன் அவரைக் கடைத்தெருவில் பார்த்தேன். இப்போது வீட்டிலேதானிருப்பார். போய் பாருங்கள். ராஜு சாஸ்திரி தான் வழி காண்பித்தார் என்று சொல்லுங்கோ" என்றார். அவருக்கு எங்கள் வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டு சற்று வேகமாக நடக்கலானோம். "இதோ பாருங்கோ! தெற்கு பார்த்த வீடு. கோடியிலிருந்து பத்து பதினைந்து வீடுகள் தள்ளி" என்று அடையாளம் தெரிவித்தார். தலையை அசைத்துவிட்டு நகர்ந்தோம்.

* * * *

பல வருடங்களுக்குப் பிறகு ஒருவரை யொருவர் சந்திப்பதென்றால் அது ஒரு தனி அனுபவம். விசேஷ இன்பம். அதுவும் நல்ல மனத்துடன் கூடியவர்களைக் காண்பதென்றால்

இன்னும் விசேஷம். உண்மை நட்புள்ளவர்கள் நண்பர்களுக்காக 'ஓடி ஆடி' என்ன வேண்டுமானாலும் செய்யமுடியும் என்பதை ஸ்ரீ யதிராஜர் அவர்களின் அன்றைய நடத்தையில் நன்கு கண்டேன். எவ்வளவு சிரமம்! என்ன அலைச்சல்! அவர் ஒன்றையும் பொருட்படுத்தாது எங்களை எல்லாவிடங்கட்கும் அழைத்துச் சென்று, சகல ஏற்பாடுகளும் செய்தார். போடோ பிலிம் வாங்கிக்கொண்டு கோயிலில் முக்கியமான சில பாகங்களைப்படம்பிடித்துவிட்டு, பிறகு புஷ்கரணியில் ஸ்நானம் செய்து சந்நிதிக்குச் சென்றோம்.

* * * *

அந்த சேவையை என்னென்று வர்ணிப்பது? மேற்கே திரும்பினால் ஸ்ரீ கோவிந்தராஜரின் அதியற்புத சேவையும், வடக்கே திரும்பினால் ஸ்ரீ நடராஜனின் ஆனந்தத் தாண்டவமும் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. இப்படித் திரும்பினால் ஆழ்வார்களின் பாடல்களும், அப்படித் திரும்பினால் நந்தனாரின் சரித்திரமும் நினைவிற்கு வந்தன. குலசேகராழ்வார், திருமங்கைமன்னன் முதலிய பக்தசிகாமணிகளின் பாசுரங்களும், நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளும் தாமாக வாயைவிட்டு வெளிவர ஆரம்பித்தன. மெய்மறந்து நின்றிருந்த சமயம் மணி 10 அடித்தது காதில் விழுந்தது. இன்று இவ்வளவுதான் பிராப்தம் என்று தேற்றிக்கொண்டு அவசரமாக நண்பர் இல்லத்தை யடைந்து சாப்பிட்டுவிட்டு ஸ்டேஷனுக்கு ஓட்டம்பிடித்தோம். நாங்கள் செல்வதற்காகவே ரயில் காத்திருந்ததுபோல ஒரே நிமிடம்தான் இருந்தது. வெகுப் பிரயாஸப்பட்டு வண்டியில் ஏறியதுதான் தாமதம் உடனே ரயில் தன் சங்கீதத்தை அலறிக்கொண்டு நகரவாரம்பித்தது. கண்ணுக்கெட்டிய வரை நண்பரைப் பார்த்துக் கையை அசைத்துக்கொண்டே சென்றோம்.

* * * *

இம்மாதிரி அனுபவம்—அதுவும் நான்கு மணி நேரத்திற்குள்—எதிர்பாராது உங்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதை உங்களால் மறக்கமுடியுமா? பெரிய க்ஷேத்திரத்தைக்கண்ட திருப்தி; நண்பரின் உள்ளன்பையறிந்த சந்தோஷம்; உங்களுக்காக படம் பிடித்த ஆனந்தம் இவையெல்லாம் ரயிலில் சந்தித்த உத்தமரின் தூண்டுதலால் அல்லவா ஏற்பட்டன!

* * * *

படங்களைப்பற்றி சொல்ல மறந்துவிட்டேனே. மேல் வரிசையில் முதலில் உள்ளது கோயிலின் கிழக்கு கோபுரத்தின் தோற்றம்; தேருக்குள் நின்றுகொண்டு எடுக்கப்பட்டது. இரண்டாவதாக உள்ளது புஷ்கரணியும், வடக்கு கோபுரமும். கீழ் வரிசையில் முதலிலிருப்பது தெற்கு கோபுரவாசல். கடைசியிலிருப்பது மேற்கு கோபுரவாசல். நடுவிலிருப்பது ஸ்ரீ கோவிந்தராஜர் சந்நிதியின் கோபுரவாசலும், த்வஜஸ்தம்பமும். முதலில் சொன்ன நான்கு கோபுரங்களையும் ஒவ்வொருவரும் நேரில் உற்றுப் பார்க்கவேண்டும். மிக அரிய சிற்பத்திறமையைக்காட்டும் வேலைப்பாடுகளமைந்தவை. நாட்டிய சாஸ்திரத்தில் அடிப்படையாகவுள்ள 108 பாவங்களையும் கல்லில் மிக அழகாக செதுக்கியிருக்கிறார்கள் நமது அரிய சிற்பிகள். சிதம்பரம் போகாமல் இருக்கலாமோ ?

பழமொழியா ? நடைமொழியா ?

வை. மு. கோ.

பேயிக்குக் கள்ளுவார்த்தாப்போலே என்பார்களே, அதுபோலவிருக்கிறது அவனுடைய நிலைமை. உத்யோகம் ஆனாலும் ஆயிற்று. "அல்பம் பணம் படைத்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிக்குமாம்' என்பதுபோல் வீட்டில் நடக்கும்போதுகூட செருப்பும் கால் சட்டையும் கழட்டுவதே இல்லையாம்' என்று ஆரம்பித்தாள் சீனிப்பாட்டி.

இதைக்கேட்ட நாணுப்பாட்டியா சும்மாவிடுவாள்? "ஏண்டி சீனி! 'அஷ்டதரித்திரத்திற்கு ஐச்வர்யம் வந்தால் அப்பன் ஏது ஆயி ஏது' என்பார்களே! அது இவன் விஷயத்தில் சரியாகிவிட்டது. கூடப்பிறந்த ஒருத்தி மருந்துபோலிருக்கிறாள். அவளை லக்ஷ்யம் செய்கிறானா! 'குடியில் பிறந்த பெண்ணின் வயிறெரிந்தால் கொடியிலுள்ள சேலை நின்று எரியும்' என்பார்கள். அவள் கண்ணைச் கசக்கினால் இவனுக்கு நல்லதா? நீயே சொல்லு.

சீனி:—நான் சொல்வதற்கென்ன இருக்கு? நான் எத்தோடு கூட்டு எரப்போடு தாவாரம்? வாழ்ந்தார் மகளா! வளையிட்டார் பேத்தியா! ஏதோ, பூமிக்கு பாரமாய் சோத்துக்குக் கேடாய்' இருக்கிறேன். என் வார்த்தை இங்கு ஏற்குமா! நான் எத்தனை சொன்னாலும் "செவிடன் காதில் சங்கு ஊதினமாதிரிதான் இருக்கு. தங்கையைக் கூப்பிடுடா! கூப்பிடுடா!" என்று நான் முட்டிக்கொள்கிறேன். "ஏழைச்சொல் அம்பலம் ஏறுமா?"

நாணு:—"அழஅழச் சொல்லுவா தன் மனுஷ்யாள், சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவர் பிறமனுஷ்யாள்" என்பார்கள். நாம்ப எத்தனை சொன்னாலும் அதற்கு மதிப்பு கிடையாது. ஊரார் ஏசிப் பேசினால் அப்போது உறைக்கும். "ஒரு புடவை உண்டா! ஒரு ரவிக்கை உண்டா?" என்று அந்த பெண்ணை காக்கைக் குத்துவதுபோல் மாமியார் குத்துகிறாள். 'காலம் போதும் வார்த்தை நிற்கும்' என்பார்கள். இந்த எச்சுத்தான் நிற்கும். 'காணாமல் கலம் கொடுத்தாலும் நிறக்குமா !'

சீனி:—"நித்ய கல்யாணமும் பச்சை தோரணமும்" வீட்டில் தான் தினம் நடக்கிறதே; இந்த சவரணைக்கு ஒரு தேரு திருநாளுக்குக்கூட ஊரிவில்லாது கதவை அடைத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இந்த வீட்டிற்கு யார் வருவார்கள்? "வந்தவர்களுக்குச் சோறும் வராதவர்களுக்கு உலை நீரும்" எங்க பெரியவாள் வைத்திருந்தாற்போல் இங்கு ஒன்று உண்டா! எச்சக்கையால் காக்காய் ஓட்டாத புண்யவதி தர்மபத்தினியாய் வந்திருக்கிறாள். 'கோட்டுப்பிணாத்திற்கு கொழுப்பு அதிகம்' என்பது போலத்தான் அவளும் இருக்கிறாள். மரியாதையா, மட்டா! ஒன்றுமில்லை. "ஒரு நாளுமில்லாத திருநாள் போல் வந்தாளாம். திருநாளெல்லாம் வெறும் நாளாய் போயிற்றாம்" என்று பழமொழி சொல்வார்கள். அதுபோல திடீரென்று நாத்தனார் வீட்டிற்குப் போனாளாம். அவள் ஊரிலில்லையாம்.

நாணு:—அப்படியா! சோழியன் குடுமி சும்மா ஆடுமா! ஏதோ காரியமாகத்தான் போனாள் என்று கேள்விப்பட்டேன். தன் தம்பிக்கு வரன் பார்க்கத்தான் போனாளாம். கம்புக்கும் களைவெட்டி தம்பிக்கும் பெண் பார்த்ததுபோல் ஆயிற்று.

தொடரும்.



மதிப்புரை

கதைக்கோவை—தொகுதி 1

[Crown 8vo 504 pp. Feather weight Rs. 3/8. Glazed Rs. 3.]

அலயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர்

இப்புத்தகத்தில் தமிழ் நாட்டின் 40 பிரபல எழுத்தாளர்களின் 40 சிறந்த சிறு கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீமான் ரகுநாதய்யர் முன்னுரையில் கூறியுள்ளபடி "நாவல் எழுதுவதைக்காட்டிலும் சிறு கதை எழுதுவதே சிரமம். நாவலுக்கும் சிறு கதைக்கும் முக்கிய அங்கங்கள் வெவ்வேறு. வித்தியாஸம் கதையின் நீளத்தைப் பொருத்து மட்டும் அல்ல. ஓர் அழகிய சிறு கதை அதைப் படிப்பவனுக்கு உள்ளம் நிரம்பவேண்டும். மனக் கண்ணினின்றும் ஒளி வீசவேண்டும். படம் சிறிதாயினும் சித்திரம் வீரியமாயும், வர்ணங்கள் கண்ணைக் கவரும்படியாயும் இருக்கவேண்டும். சிற்பத்தில் நகாசுவேலையில்தான் சுவாரஸியம் முழுவதும். ஒரு சம்பவத்தையோ ஓர் இடத்தையோ ஒரு கணப் பொழுதையோ ஓர் ஆத்மாவையோ ஏதோ ஒரு நிகழ்ச்சியில் நினைவூட்டப்பட்ட ஞாபகங்களையோ ஸ்பஷ்டமாகவும் உள்ளது உள்ளபடியேயும் மறக்கமுடியாத அழுத்தத்துடனும் படிப்பவர் காணச்செய்வது இக்கலையின் நோக்கம்"

அநேகமாக எல்லா ஆசிரியர்களும் இந்த தத்துவத்தை கடைப்பிடித்திருக்கின்றனர். தமிழ் தாத்தா எழுதிய "தருமம் தலைகாக்கும்" என்பது படிப்போர் மனதைக் கவரச்செய்யும். Dr பாலகிருஷ்ணன் எழுதிய "பெற்றோர்கள்" என்னும் கதையைப்படிப்பவர்கள் அதில் எழும் சம்பவங்களை நேரில் அனுபவிப்பது போலவே தோன்றுகிறது. கலைஞனின் தியாகம், ஜனகாவின் குதூகலம், குழந்தை உள்ளம், மூன்றாம்பிறை, நொண்டிக் குழந்தை, ஏழையின் குழந்தை முதலியன மிகவும் நன்றாய் எழுதப்பட்டுள்ளன. அநேகமாக எல்லாக் கதைகளிலுமே உரை நடையும், விஷய விவரணங்களும், தமிழ்நாட்டில் இவ்வித எழுத்தாளர்கள் இருக்கிறார்கள், என்பதை அறியச்செய்து ஒரு பெருமிதத்தை உண்டாக்குகின்றன.

முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி, ஐரோப்பிய எழுத்தாளர்களின் நிழல் அதிகப்படியாகவே,—சில கதைகளில் ஒரு வரம்புகடந்தே—விழுந்திருக்கிறது. இதை ஒருவாறு நீக்கி சோகரஸமுள்ள கதைகளையும் அதிகப்படுத்தி வெளியிட்டால் தமிழ் சிறு கதைப் பிரசுரத்தில், நேர்முறையில் ஓர் முன்னடி வைத்ததாகும்.

300 பக்கங்களுக்குமேல் பெதர்வெயிட் பேபரில் Crown 8vo ஸைஸில் புத்தகம் பிரசுரிப்பதைப்பற்றி ப்ரசுரகர்த்தர்கள் யோசிக்கவேண்டியது அவசியம். ஒவ்வொருவரும் வாசிக்கத்தக்க இப்புத்தகம், தமிழ் புத்துயிர் பெற்றுவருவதைக் காட்டும் ஒரு அறிகுறியாகும். படிப்போருக்கு ஆனந்தமூட்டும் என்பதில் ஐயமில்லை. இதன் இரண்டாம் தொகுதி பிரசுரமாவதை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

V. K. சௌரிராஜன். M.A., L.T.,

ஸாஹித்யகர்த்தா : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

இராகம் : ஸுமனீஸ ரம்ஜனி. தாளம் - சதுரஸ்ரஜாதி - த்ரிபுடை:

பல்லவி

காவுமனி எந்தோ வேடிதினேயா—
கருடவாகனு நினுவேடிதினேயா (கா)

அநுபல்லவி

ஸ்ரீவேணுகோபாலா ! ச்ருதஜனபரிபாலா
தேவகிப்ரியபாலா ! ஸ்ரீ ருக்மிணி லோலா (கா)

சரணம்

அசுருனி சம்பின ஆயாஸமோ ! லேக
ஸசிமுக தேவினி கூசேஸந்தோஷமோ
வசுதபாலனஜேயு வனஜ கோதா நாதா
பசிவாடனி எஞ்சி பராமுகமோதண்றீ ! (கா)

BOOKS 14 JUL 1941 MADRAS

56-வது மேளகர்த்தா.

ஷண்முகப்ரிய

ஜன்ய ராகம் :

ஸுமனீஸ ரம்ஜனி

ஸ்வரப்படுத்தியவர் : ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.

ஆரோஹணம்—ஔடவம்

ஸ	க	ம	ப	நி	ஸ்
	ஸாதாரண	ப்ரதி		கை	

அவரோஹணம்—ஔடவம்

ஸ்	நி	ப	ம	க	ஸ
	கை		ப்ரதி	ஸாதாரண	

இராகம்: ஸுமனீஸ ரம்ஜனி - சதுரஸ்ரஜாதி - த்ரிபுடை:

பல்லவி

1 ; ; ; ● ஸ்ா நீ பா ; மா | கா , ஸா , - நீ | ஸா கா ; மா ||
கா வு ம னி | யெம் தோ வே | டி தி
2 பா , நீ , ● ஸ்ா நீ பநி ஸ்நி பம | கா , ஸா , - நீ | ஸா கம பா - மா ||
ஊய் ய கா வு ம னி | யெம் தோ வே | டி தி
3 பா , நீ , ● ஸ்ா நீ பநி ஸ்க்ஸ்நி | பநி பம கஸ -நீ | ஸாக மபநி - பம ||
ஊய் ய கா வு ம னி | யெம் தோ வே | டி தி
பா , நீ , ● பப நீ பநி ஸ்ா ஸ்நி | ஸ்ா , ஸ்ா , பா | நீ பநி ஸ்க் - ஸ்நி ||
ஊய் யா கருடவாஹ ன | நின் னு வே | டி தி
பமகமபநி ●
ஊ ய் ய

அநுபல்லவி

1 ; ; ; ● பா நீ பநிஸ்ா ஸ்நி | பா , மா , - பா | நீ ப நி ஸ்ா - ஸ்நி ||
ஸ்ரீ வேணு கோ | பா லா ச்ரு | த ஜ ன ப ரி
2 ஸ்ா , ஸ்ா , ● பா நீ பநி ஸ்க் ஸ்நி | பா , மா , - கம | பா ம ப நீ - பநி ||
பா லா ஸ்ரீ வே ணுகோ | பா லா ச்ரு | த ஜ ன ப ரி
3 ஸ்ா , ஸ்ா , ● பா நீ பநி ஸ்க் ஸ்நி | பா , மா , - கம | பமமபநிப - பநி ||
பா லா ஸ்ரீ வே ணுகோ | பா லா ச்ரு | த ஜ ன ப ரி
ஸ்ா , ஸ்ா , ● ஸ்ா க்ா ஸ்ா நீ பா | நீ , ஸ்ா , - ப நி | ஸ் நி பா ; - மா ||
பா லா தே வ கி ப்ரி ய | பா லா ஸ்ரீ | ருக் மி ணி
கஸகமபநி ●
லோ லா

சரணம்

; ; ; ● பா நீ பா மா பம | கா , மா , - பா | நீ பநி ஸ்ா - ஸ்நி ||
அஸுரு னி சம் | பி ன ஆ | யா ஸ மோ
பமகாஸா ● ஸா கா ஸா நீ பா | நீ , ஸா , - நிஸ | கா ஸக மா - கம ||
லே க ஸ ஸி மு க் தே | ஷி னி சூ | சே ஸம் தோ
பா, பா, ●
ஷ மோ
; ; ; ● பப நீ பநி ஸ்ா ஸ்நி | பா , மா , - பா | நீ பநி ஸ்ா - ஸ்நி ||
வசுத பா ல ன | ஜே யு வ | னஜ கோ தா
ஸ்ா, ஸ்ா, ● ஸா க்ா ஸ்ா நீ பா | நீ , ஸ்ா, - ப நி | ஸ்ா ஸ்நி பா - மா ||
நா தா ப ஸி வா ட னி | யெம்ஸி ப | ரா மு க மோ
கஸகமபநி ●
தன் ரீ

முக்தாயிஸ்வரம்

; ; ; ● ஸ்க்ா-ஸ்க்ஸ்நிப-நிஸ் | ,-நிஸ்நிபம - பநி | , ப-மகஸநி-ஸக ||
ம ப நீ ; ● ஸ்ாநிபநி-ஸ்க்ா- ஸ்க் | ஸ் - நிபம -பநீ-ப | நிப - மகஸ-நிஸா ||
கமப-மபநி ●

சித்திர ரகளை

அங்கச்சி:—அண்ணா! அண்ணா! வேடிக்கை, ஓடி வா! ஓடி வா!

அண்ணன்.—அங்கச்சி! இந்த வண்டியை இழுத்தால் மாமியின் உடம்பு இளைத்துவிடுமாண்டி...

தயாநிதி

JMO
55

55-வது
நாவல்

வை. மு. கோதைநாயகி அம்மாள்

1941

காபிரைட்.

ஸ்ரீ

தயா நீதி

1

"உலகெல்லாம் வாழ்கவே!"

என்ற பாட்டைப் பாடுவோம். தர்மாம்பா!

நித்யகல்யாணி! லக்ஷ்மி! கற்பகம்! எல்லோரும் சேர்ந்து பாடலாம்.

முதலில் யார் சொல்வது? என்னப்பன் கருணாமூர்த்தியாகிய தயாநிதிக்குப் புஷ்பமாலையைச்சூட்டுகிறேன். பிறகு பாடுவோம்; சரிதானே?" என்று ருக்மிணி கேட்டாள்.

கூட்டத்திலிருந்தவர்களில் ஒருத்தி, "நித்ய

கல்யாணியே முதலில் பாடட்டும். நாமெல்லோரும் பஜனைபோல் கூடப் பாடுவோம். அவளுடைய குரல்தான் கம்பீரமாக விருக்கும்....நித்யா! நீ

ஆரம்பம் செய்" என்றாள். உடனே நித்யகல்யாணி வெங்கலம் போன்ற தனது கம்பீரமான சாரீரத்துடன் பாடவாரம்பித்தாள்.

உலகெல்லாம் வாழ்கவே!
மலைபோன்ற துன்பம் எல்லாம்
பனிபோன்று நீங்கவே...

1 அனந்த நபனின் அருள்மாரி பெய்யவே
க்ஷேமம் செழிக்கவே செல்வங்கள் தழைக்கவே, (உ)

2 விஜயங்கள் ஓங்கவும் விசனங்கள் நீங்கவும்
விஜய ரதஸாரதி வியனருள் தேங்கவும் (உ)

இந்த ஆனந்தகரமான புதிய வருடம் எல்லோருக்கும் பரம சந்தோஷமாயும் ஸர்வமங்களத்துடனும் இருக்கவேண்டி அருள்புரிந்து காத்திடுவாய் தயாநிதே! பார்த்தஸாரதே! பரமதயாளா! உன் சரணமே தஞ்சமென்ற ஏழைகளைக்காப்பாற்றி ரக்ஷிப்பது உனது கடமையாகு மன்றோ' என்றுஎல்லோரும்இதயபூர்வமாய்ப்ப்ரார்த்தனைசெய்தார்கள்

அருமையாகப் பாடித் துதித்துப் பின் ஒருவருக்கொருவர் சந்தனம், புஷ்பம், குங்குமம், தாம்பூலம், பழம் முதலியவைகளை வழங்கிக்கொண்டு ஆனந்தமாய்ச் சிரித்தார்கள். நித்யகல்யாணி பூரித்த உள்ளத்துடன் "இன்று அசல் கல்யாணம்போலவே இருக்கிறது. அல்லவா!" என்றாள்.

கற்பகம்:—ஆமாம். வருஷம் 365 நாட்களும் இப்படியே கல்யாணம்போலவே சந்தோஷமாயும்சர்வமங்களத்துடனும் இருக்க வேண்டும். இந்த வருஷம் முடிவதற்குள் நித்யாவுக்குக் கல்யாண மாகிவிடும். தர்மாம்பாளுக்கும் ஆகலாம்.

தர்ம:—என்? உனக்குமட்டும் எந்த கோயிலிலாவது பொட்டு கட்டிவிடப் போகிறார்களோ!—என்றாள். எல்லோரும் கொல் லென்று சிரித்தார்கள்.

லக்ஷ்:—தர்மூ! உன் வாயிக்குச் சக்கரைதாண்டீ போட வேண்டும். பொட்டு கட்டி விடுவதற்குத்தானே, என்னவோ! கற்பகம் பரதநாட்டியம் கற்றுக்கொள்கிறாள்.

நித்:—இத்தனை வயது கழித்து இப்பவா தத்திகிணதோம் என்று குதிக்கக் கற்றுக்கொள்கிறாய்?

தர்மு:—இல்லேடீ! கற்பகத்தின் தங்கை காமுவுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். அதைப் பார்த்துக்கொண்டு இவளும் செய்கிறாள். அவளுக்குக் கோபம் வந்துவிட்டதம்மா! நாம் ஒன்றும் பேசவே வேண்டாம்.

கற்ப:—எனக்கொரு கோபமும் இல்லை. பரதநாட்டியத்தை நீங்கள் அத்தனை இளப்பமாக நினைத்துவிட்டதுதான் வருத்தமாக விருக்கிறது. அதன் மகிமை தெரிந்தால் இப்படிச் சொல்வீர்களா!

நித்ய:—கற்பகம்! நீ நினைக்கிறபடி நான் சொல்லவில்லை. இத்தனை வயதிற்குமேல் கற்றுக்கொண்டு என்ன செய்யப்போகிருய்? உனக்கு வரப்போகிற கணவன் அதை விரும்பாதவனுயிருந்தால் நீ கற்றது வீணுகிவிடுமே என்று எண்ணிக் கூறினேனம்மா! அது குற்றமாயிருந்தால் மன்னித்துவிடு. புத்தி. புத்தி. புத்தி—என்று கன்னத்திலறைந்துகொண்டாள். மறுபடியும் எல்லோரும் சிரித்தார்கள்.

லக்ஷ்:—வருஷப் பிறப்பு மகோத்ஸவத்தை வெகு சந்தோஷமாகக் கொண்டாடும்போது மத்தியில் சண்டை எதற்கடீ! "கரடி பூசையில் சிவன் புகுந்தாற்போல்" என்று தடமாட்டமாகக் கூறியதைக் கேட்டு மீண்டும் எல்லோரும் கொல்லென்று சிரித்துப்பின், "லக்ஷ்மீ! உனக்கென்ன இதற்குள்ளாகவா கிழவிளாகப் பேசும் காலம் வந்துவிட்டது. சிவன் பூசையில் கரடி புகுவதா! கரடி பூசையில் சிவன் புகுவதா!" என்று கேலி செய்தார்கள்.

லக்ஷ்மியின் முகம்சுண்டியது. "என்னமோம்மா! வாய்த் தவறி வந்துவிட்டது. நான் அப்படிக் குளறியதனுல்தானே கற்பகங்கூடக் கோபத்தைமறந்து சிரித்துவிட்டாள். அதுபோதும். மணியாகிவிட்டது. கோயிலுக்குப்போகவேண்டும். நான் வருகிறேன்" என்ருள்.

இதற்குள் தர்மாம்பாள் "இருடீ! மணி இன்னும் ஆறுகூட அடிக்கவில்லை. சற்றுநேரம் கும்மி யடித்துவிட்டுப் போகலாம். உம்...வாருங்கள் குத்துவிளக்கை மத்தியில் வை...உம்...என்ன யோசனை?"...என்று எல்லோருடைய கைகளையும் பிடித்து இழுத்து நிறுத்தினுள்; தர்மாம்பாளே முதலில் கும்மி பாடி மற்றவர்கள் சந்தை பாடிக் கும்மியடித்தார்கள்.

அந்த ஊர் பெரிய கிராமமாகையால் கும்மியடிக்கும் சப்தத்தைக் கேட்டு அக்கம்பக்கம் உள்ளவர்கள் ஆண்பெண் அடங்கலும் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டார்கள். சிறுமிகளின் உத்ஸாகம் தலைக்கேறியதால் பின்னும் அழகான பாட்டுக்களைப்பாடி விதவிதமாக தாளங்களை மாற்றிக் கொட்டுக்களை அமைத்துக் கால்களை மாற்றிக் கும்மியடித்தார்கள்.

இந்த கும்மியடிக்கும் பெண்களின் ஆனந்தத்தைக் கண்டு இன்னும் பல பெண்கள் உத்ஸாகம்மேலிட்டு இவர்களுடன் கலந்து கொண்டார்கள். கும்மியின் கூட்டம் வலுத்ததால் பாட்டின் த்வனி

யும் வலுத்தது. கும்மியடிக்கும் சிறுமிகளின் பெற்றோர்கள் இந்த ஆனந்தகரமான காக்ஷியைக் காணக் கூட்டங் கூடினார்கள். அவ ரவர்களது பெண்களின் பாட்டையும் கும்மியடிப்பதையுங்கண்டு உள்ளம் பூரித்தார்கள். "கும்மியடிப்பது எத்தனை அருமையானகலை. தேகப்பயிற்சிக்கும் ஏற்றதாகவிருக்கிறது. பார்ப்பதற்கும் ஆனந்தம்: கேட்பதற்கும் ப்ரம்மாநந்தம்: மனத்திற்கு மகிழ்ச்சி. எல்லாம் ஒருங்கே அமைந்துள்ள இக்கும்மி இக்காலத்தின் நவநாகரீககோலத் திற்கு ஏற்காது விட்டுவிட்டார்களே சார்! என்ன அழகாயிருக் கிறது!" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்

தாய்மார்களின் உள்ளம் ஆனந்தத்தினால் பூரித்தது. "நம்ம காலத்தில் இந்த கும்மி கோலாட்டம் போடுவதற்காகவே ஜவந் தரை வைத்துக் குட்டிகளைச் சேர்த்து வீடுவீடாய் கோலாட்டமும் கும்மியும் போடவைப்பார்கள். இக்காலத்தில்தான் ஜவந்தரையைக் காணவே அதிசயமாயிருக்கிறது. அதோடு கும்மியடிப்பதும் கோலாட்டம் போடுவதும் வெட்கமென்று பெண்கள் கருதும் காலமாகிவிட்டது. இந்த ஊரிலாவது பரவாயில்லை. பட்டினவாஸங் களில் கும்மியை அடியோடு தள்ளிவிட்டார்களாம். இந்த ஊர் இரண்டாங்கெட்டானாகவிருப்பதால் இன்னும் அவ்வளவு நாகரீகம் மூடவில்லை" என்ற வார்த்தைகள் தாய்மார்களின்முன்பு தவழ்ந்தன.

அந்தோ, பரிதாபம்! நித்யகல்யாணியின் தாயார் இந்த காட்சி யைக் கண்டு சந்தோஷப்பட்டாளெனினும் தன் கணவன் இதைக் கண்டு ஆனந்திக்க முடியாது தவிப்பதைக் காண மனம்கலங்கியது.

நித்யாவின் தகப்பனாராகிய திருமூர்த்தி சதா பகவன்னாம ஸ்மரணைசெய்துகொண்டே உட்கார்ந்திருப்பார். தன்னோடு யாரா வது நல்ல விஷயமாகப் பேசவந்தால் அதிலும் சிள்ளு பிள்ளு என்று முகத்தைக் காட்டாதவர்களாயிருந்தால்தான் அவர்களுடன் பேசுவார். இல்லையேல் தன் விதியை எண்ணிப் பேசாதிருப்பார். இன்று வருஷப் பிறப்பானதால் தன் பழங்காலக் கதைகளெல்லாம் எண்ணி மனம் வருந்தியவாறு உட்கார்ந்திருந்த சமயம் இவர்கள் கும்மியடித்துப் பாடிய கானாம்ருதவர்ஷம் இவர் காதில் பட்டவுடன் இவருடைய வரண்டு சூன்யமாயிருந்த இதயத்திலும், கண்களிலும் ஒரு சோபையும், ஆனந்தக்களையும் திடீரென்று எழுந்தன.

நித்யாவின் குரல் கணீரென்று கேட்பதைக் கேட்டு மிகவும் சந் தோஷப்பட்டு அந்த திக்கில் தன் செவியைச் சாய்த்துக் கேட்டார். அதே சமயம் அவருடைய மகன் தாமோதரன் அங்கு ஓடிவந்து

"அப்பா! அப்பா! நம்ம நித்யாவும் மற்றபெண்களும் வெகு அழகாக கும்மியடிக்கிறார்கள். நீங்கள் வந்துபாருங்கள்" என்று அழைத்தான்.

பாலைவனம்போல் வரண்டு சோபையற்றுக்கிடந்த கண்களில் மளமளவென்று ஜலம் வழிந்தது. "தாமூ! நான் பார்க்கவா வர வேண்டும்?...எதைப் பார்ப்பதப்பா!" என்று தழதழத்த குரலில் கேட்டபோது துக்கம் தொண்டையை அடைத்தது. உடனே சமாளித்துக்கொண்டு, "தாமூ! நீ போய் பார்த்து இன்புறு. நான் கேட்டுக் களிக்கின்றேன். அந்தகனுக்குப் புறக்கண்ணால் பார்க்கமுடியாதெனினும் அகக்கண்ணால் இதோ பார்த்துக்கொண்டே இருக்கிறேன். நீ போடாப்பா!" என்று வருத்தத்துடன் கூறினார்.

சிறுபையன் அதற்குமேல் என்ன சொல்வான் பாவம்! பேசாமல் போகவும் மனம் வரவில்லை. தன் பிதாவுக்குக் கண் தெரியாது போய்விட்ட வருத்தம் அப்போதுதான் நன்றாகத் தெரிந்தது. "ஏன் இப்படி என் தகப்பனாருக்கு மட்டும் ஆகவேண்டும். அவர் என்ன பாவத்தைச் செய்தார். அவருக்கு ஏன் இந்த சோதனை" என்று அந்த தளிர்போன்ற இதயத்தில் வேகமான ஒருஆத்திரமும், விசனமும் பொங்கி எழுந்தன. கடவுள்மீது சீறிவிழுந்தான்.

திருமூர்த்தியை மெல்லக் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு கும்மியடிக்கும் இடத்திற்கு வந்தான். காதால் கேட்டு ஆனந்தித்தபடியே திருமூர்த்தி உட்கார்ந்திருந்தார். மனத்தில் பொங்கி எழும் ஆனந்தத்தில் குழந்தைகள் கும்மியடிப்பது அப்படியே கண்ணில் தெரிவதுபோல் ஒரு தோற்றம் உண்டாகியது. ஒரு க்ஷணம் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினார். இதயம் இன்ப மலராய் மலர்ந்தது.

"குழந்தைகளெல்லாம் தீர்க்க ஸுமங்கலிகளாயும், தீர்க்காயுஸுடனும், நன்றாக இருக்கவேண்டும்" என்று ஒவ்வொருவரும் இதயபூர்வமாய் வாழ்த்தி வரங்கொடுத்தார்கள். சிறுமிகள் கும்மியை முடித்துப் பின் மங்களம் பாடினார்கள். அங்கிருந்தவர்கள் எல்லோருக்கும் ஆனந்தம் தேங்கியது.

ஒரு பெரியவர் சிறுமிகளைப் பார்த்து, "ஸர்வமங்களானிபவந்து. சீக்ரமே விவாக ப்ராப்திரஸ்து...அடுத்த வருஷப் பிறப்பன்று உங்களில் யார் யார் புக்ககத்தில் கணவனுடனும் மற்றவர்களுடனும் இந்த வைபவத்தைக் கொண்டாடப் போகிறீர்களோ! பகவத் கிருபையால் நல்ல வரன்கள் கிடைக்கவேண்டும். ஆயிரங் காலம் நீங்கள் சகல சௌபாக்கியங்களுடன் வாழ்ந்து ஸுமங்கலிகளாகவே இவ்வுலகை விட்டகலவேண்டும்" என்றார்.

இதைக்கேட்ட ஒரு பெரிய ஸுமங்கலிப் பாட்டியம்மாள், சந்தோஷத்துடன் "ஸ்வாமிகளே! அதைச் சொல்லுங்கோ! பின்னும் பத்துதரம் வாழ்த்துங்கோ! அடுத்த வருஷம் இந்த கொண்டாட்டத்திற்குள் நான் மகாராஜியாய் சாகவேண்டும் என்று என்னையும் வாழ்த்துங்கோ! எங்க எஜமானருக்கு தீர்க்காயுஷ்மான்பவ" என்று வாழ்த்துங்கோ! பெண்களுக்கு வேண்டிய வரன் இதுதான்" என்று ஆனந்தக் கண்ணீர் முட்டக் கூறினள்.

இதைக்கேட்ட ஒருவர் "இதென்ன வார்த்தைகள். நல்ல சந்தோஷமான சமயத்தில் சாவு, சாவு என்கிறீர்களே! என்றைக்குப் பிறக்கிறோமோ அன்றைக்கு இறப்பும் நிச்சயம். திரும்பத் திரும்பச் சொல்கிறீர்களே! நல்ல சமயத்திலா இப்படிப் பேசுவது" என்று சற்று ஆத்திரத்துடன் கேட்டார்.

பெரியவர்:—(நகைத்துக்கொண்டே) ஸ்வாமிகளே! கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் உங்களைவிட வயதிலும் மற்ற அனுபவத்திலும் தேர்ந்தவன். அதனல் சொன்னேன். இப்போது குழந்தைகள் ஸ்வாமியை வேண்டி ப்ரார்த்தனை செய்வதெல்லாம் எதற்கு சார்! க்ஷேமத்திற்குத்தானே...அந்த க்ஷேமத்தின் முடிவு இச்சிறுமிகள் நன்ருக பதினறும்பெற்று சர்வமங்களத்துடனும் வாழ்ந்த பிறகு சுமங்லிகளாய்ச் சாகவேண்டும். அதுதான் இவர்களுடைய கோரிக்கைகளின் சமாப்தியாகும். தெரிந்ததா! இதனல் உமது பெண்ணுக்கு மங்களமேயன்றி தீமை இல்லை. நல்ல சமயத்தில் சாவைச் சொல்லக்கூடாதென்பது வாஸ்தவந்தான். பேசவகைதெரிந்து வாழ்த்தும் முறையில் சொல்லலாம். திடீரென்று 'நீ செத்துப்போ' என்று எந்த முட்டாளும் சொல்லமாட்டான். பயப்படாதேயும்—என்ருர்

இவைகளைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந் திருமூர்த்தி நகைத்துக்கொண்டே "ஐயா! குருடன் வேண்டுவது கண். மலடி வேண்டுவது ஒரு குழந்தை. தரித்திரன் வேண்டுவது தனம். நோயாளி வேண்டுவது ஆரோக்யம். பெண்டுகள் வேண்டுவது தம்முடைய சிறந்த வாழ்வுடன் மஞ்சளும், புஷ்பமுமாக உயிர் துறந்து, தம்முடைய மகனின் கையால் கொள்ளி ஏற்று முக்தியடைய வேண்டும் என்பதேயாகும். இந்த வரனை பகவான் கொடுக்கும்படி பெரியோர்கள் ஆசிகூறுவது சகஜந்தானே அது கிடைக்கவேண்டும் சார்! கோபிக்காதேயுங்கள்" என்ருர்.

"வாஸ்தவம். வாஸ்தவம். ததாஸ்து" என்று இதை எல்லோரும் ஆமோதித்தார்கள். பிறகு கூட்டமும் கலைந்தது. சிறுமிகள் தம்தம்

பெற்ருேர்களுடன் கும்மாளமடித்துக்கொண்டு வீட்டிற்குச் சென்ருர்கள். நித்யாவும் தன் தகப்பனுரின் கையைப் பிடித்துக்கொண்டு "வாங்கோப்பா! கோயிலுக்குப் போகலாம்" என்ருள்.

உடனே தாயார், தகப்பனுர், தம்பி ஆகிய மூவருடனும் நித்யா கோயிலுக்குப்போனுள். முறையே அம்மன், ஸ்வாமி, விநாயகர் முதலியவர்களைத் தரிசித்துக்கொண்டு ப்ராகார ப்ரதக்ஷணம் வரும்போது திருமூர்த்தி நித்யாவை நோக்கி "நித்யா! இன்று ஸ்வாமிக்கு என்ன அலங்காரம்மா!" என்று உள்ளக்கிளர்ச்சியுடன் கேட்டார்.

நித்ய:—மயில்வாகனத்தில் ஆனந்தமாக எழுந்தருளியிருக்கிருர். மயில் தோகைக்குச் சரியான மயில் வர்ணப் பீதாம்பரம் தரித்திருக்கிருர். ஆபரணங்கள் ஜ்வலிக்கின்றன. வஜ்ரவேல் கையில் ஜகத்ஜோதியாய் மின்னுகிறது. அம்பாள் மத்தாப்புக் கலர் பீதாம்பரம் அணிந்து கல்யாணப் பெண்ணைப்போல் அதிக ஆனந்தத்துடன் காக்ஷிக் கொடுக்கிருள்—என்று பேசும்போது 'இதைநாம்ஸேவிக்கக் கொடுத்துவைக்கவில்லையே!' என்று வருத்தத்திஞல் திருமூர்த்தியின் கண்கள் நீரை உதிர்த்தன.

அதைக்கண்ட நித்யாவின் இதயத்தில் விசனம் பொங்கி எழுந்தது. தந்தையின் தவிப்பையறிந்து அதைமாற்றி அவருக்கு ஒரு ஆனந்தத்தை எழுப்புவதற்காக நித்யா அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு "எம்பா! நான் இன்று பாடியது வெகு நன்ருயிருந்ததென்று எல்லோரும் சொல்கிருர்களே! அப்படி நான் நன்ருகப் பாடினேனுப்பா!" என்ருள்.

திரு:—உன்னுடைய பாட்டு இன்று உண்மையில் தேவகானம் போலவே இருந்தது. கேட்டுப் பரமானந்தமடைந்தேன். இன்று இம்மாதிரி கொண்டாட்டத்தை நடத்த உங்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தது. செலவுக்கு யார் பணங்கொடுத்தது.

நித்ய:—என்னுப்பா! புதிதாகக் கேட்கிறீர்களே! வருஷா வருஷம் எங்கள் பள்ளிக்கூடத்திலேயே கொண்டாடினேம். இந்த வருஷம் வீட்டிலே கொண்டாடுவோம் என்கிற யோசனைதோன்றியது. நாங்கள் ஆளுக்கு ரெண்டணுபோட்டு இதற்கு வேண்டிய செலவு செய்தோம். வெகு அழகாக நடந்ததில்லையாப்பா! உனக்கு மறுபடியும் பழயபடிபோல் கண்ணு நன்ருகத் தெரியவேண்டுமென்று ஸ்வாமியை வேண்டிக்கொண்டேன்—என்று சந்தோஷத்துடன் கூறிஞள். பேசிக்கொண்டே வீட்டிற்கு வந்தார்கள்.

2

ஒரு ஆள் கடிதம் ஒன்று கொண்டுவந்து கொடுத்தான். திருமூர்த்திக்குப் படிக்கமுடியாதாகையால் அவன் மனைவியாகிய ஞானம்பாளே படிக்கவேண்டும். அக் கடிதத்தை சாஸ்திரிகள் கொடுத்தனுப்பினரென்று தெரியுமாதலால் கல்யாண விஷயந்தான் என்று தீர்மானித்து அதைப் படிக்கவாரம்பித்தாள்.

ம-ா-ாஸ்ரீ திருமூர்த்திக்கு! உபயக்ஷேமங்கள்.

நான் அன்று சொல்லிய வரன் சரிப்படவில்லை. புள்ளையாண்டான் நன்றாகப் படித்த பெண் வேண்டுமென்கிறான். அதோடு ரெண்டாங் கல்யாணம் என்று பெயரேயன்றி பிள்ளையாண்டானுக்கு 30 வயதுகூட ஆகவில்லை. ஆதலால் அவர்கள் சற்று முடுக்காகவே இருக்கிறார்கள். உங்களுக்குக் கையில் கொடுத்துச்செய்து கொள்ள சம்மதிக்கவில்லை. அதுபோனால் போகிறது. நான் முன்பு சொல்லிய புளியம்பட்டி ஆசாமி ஞாபகமிருக்கலாம். அவருடைய மனைவி மூந்தாநாள்தான் இறந்தாள். இனிமேல் ஆக்ஷேபனை இருக்காதென்று நினைக்கிறேன். வரனுக்கு வயது 40 தானாகிறது. குழந்தை குட்டி ஒரு தொல்லையும் இல்லை. கையில் 500 ரூபாய் கொடுக்கிறாராம். 2 வேலி பூமியிருக்கிறது. நித்யாவைப்பற்றி எல்லாம் சொல்லியதில் அவருக்கு மிகவும் திருப்தியாகிவிட்டது. கர்மாதி முடிந்ததும் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யலாம்" என்றார். இதற்கு உடனே பதில் போடவும். எனக்கு உடம்பு சரியில்லாததால் நேரில் வர முடியவில்லை. உடனே பதில் எழுதவும்.

இங்ஙனம்,

நாணு சாஸ்திரி"

என்றதைப் படித்தாள். திருமூர்த்திக்கு மிகவும் திருப்தியாகவிருப்பதை அவருடைய முகபாவமே எடுத்துக்காட்டியது. "அப்பாடா! ஒரு கவலை விட்டது. எத்தனை பெயர்களைக் காலைப் பிடித்துக் கெஞ்சினேன். இந்த வரன் தேவலைபோல் தோன்றுகிறது. என்ன ஞானம்! நீ என்ன சொல்லுகிறாய்? முதலாவது, குழந்தை குட்டிகள் தொல்லையில்லை. இரண்டாவது, சோத்துக்கும் துணிக்கும் பஞ்சமில்லை. மூன்றாவது, குழந்தையை ஆசையாய் வைத்துக்கொள்

வான். இல்லையா?" என்றார்.

இதுகேட்ட ஞானம், "வாஸ்தவம். எனக்கும் திருப்தியாகவே இருக்கிறது. இதுவரையில் வந்த வரன்கள் எதுவும் மனத்திற்குச் சரிப்படவே இல்லை. இதுவே தேவலை; முடித்துவிடலாம் என்றே நினைக்கிறேன். எத்தனை பேர்தான் வந்து பார்ப்பதும் பேசுவதும் குழந்தையைப் பாடச்சொல்வதும், கும்பிடச்சொல்வதும். போதும்; போதும் என்றாகிவிட்டது" என்று கூறினாள்.

இவைகளைக் கேட்டுக்கொண்டே படுத்திருந்த நித்யாவின் குதூகலமான இதயத்தில் திடீரென்று கலவரம் உண்டாகியது. அவள் என்ன ஒட்டுக் குழந்தையா! 16 வயது மங்கையாதலால் அவளுக்கு தன் குடும்ப நிலையும், தகப்பனாரின் தவிப்பும் நன்றாகத் தெரியும். ஆதலால் மற்றப் பெண்களைப்போல் இவளும் சிறிய கணவன் அழகானவன், செல்வவந்தன், இப்படியெல்லாம் தேட முடியுமா! தனக்கும் அதற்கும் வெகு தூரமென்று நன்றாகத் தெரியும். இருப்பினும் திடீரென்று 40 வயது மனிதனுக்கு வாழ்க்கைப்பட மனம் துணியுமா! சற்று குழம்பியது. அதை நினைக்கும்போதே முகம் சுருங்கியது. தலை நறைத்து பல்கள் தளர்ந்து முகம் குழிந்து தோல் சுருங்கி கிழஸ்வரூபமாக ஒருபிம்பம் தன்னெதிரில் நிற்பதுபோல் தோன்றியது. உடல் நடுங்கியது. அசங்கியத்தால் முகம் சுளிப்புற்று கண்கள் இறுக மூடிக்கொண்டன.

"கிழவன்...குடுகுடு கிழவன்...தலை நறைத்தக் கிழவன்...பல் விழுந்த கிழவன்...நாற்றம் சூழ்ந்த கிழவன்"...என்று அவள் காதுகளில் ஒலிப்பதுபோல் தோன்றியபோது அவளால் சகிக்கமுடியாத வேதனை செய்தது. அந்த மனபீதியின் வேகத்தில் அம்மாதிரியான கிழங்கள் அவள் கண்முன்பு உலாவுவதுபோல் ஒரு உருவெளித் தோற்றமும் உண்டாகி பின்னும் அவளை வதைத்தது.

சந்திரபிம்பம்போன்ற வதனமும், ரதிதேவிக் கொப்பான அழகும் நிறைந்த ஒரு மங்கை என்னவிருந்தாலும் மேற்குறித்தமாதிரியான ஒரு கிழவனை மனமுவந்து மணப்பதென்றால் முடியுமா! சற்று நேரம் தவித்தாள். மனத்தைக் கட்டுப்படுத்த முடியாது புழுகாய்த் துடித்தாள். தாய் தந்தையுடன் தன் மனத்திலுள்ளதைக் கூறிவிடலாமா என்றும் நினைத்தாள். லஜ்ஜையும், விசனமும் குறுக்கிட்டன. அவைகளையும் ஜெயித்துக்கொண்டு தகப்பனாரிடம் பேச நினைத்த சமயம், ஒரு கிழவர் அங்கு வந்தார். "என்ன திருமூர்த்தி! சொன்னபடி நான் வந்துவிட்டேன். விஷயமும் கைகூடினமாதிரிதான்"

என்று கூறியவாறு உட்கார்ந்தார்.

தான் துணிந்துகூற வாயெடுத்ததையும் நித்யா நிறுத்திக்கொண்டு "இதென்ன விஷயம் பார்க்கலாம்" என்று பேசாமலிருந்தாள். திருமூர்த்தி வந்தவரை உட்காரச்செய்து பின் "உங்களை எதிர்பார்த்துக் கொண்டுதானிருந்தேன். இப்போதுகூட ஒரு வரன் வந்திருக்கிறது. உம்முடைய சமாச்சாரம் என்ன அதைச் சொல்லும்" என்றார்.

கிழவர்:—நேரேயே போய் பார்த்தேன். பையனுக்கு வயது 28தான் ஆகிறது. ஒரு வருஷத்திற்கு ஒருத்தியாய் மூன்றுபெண்கள் வந்து வந்து மறைந்துவிட்டார்களாம். நாலாவது கல்யாணமாம். மூன்று மனைவிகளும் ப்ரஸவித்தே இறந்தார்களாம். ஆனால் குழந்தைகள் ஒன்றுமில்லை. அவைகளும் கையோடு போய்விட்டனவாம். பையன் சுமாராயிருக்கிறான். ஏதோ கம்பெனியில் வேலையாம். நம்ம குழந்தையை மணக்கத் தயாராயிருக்கிறான். என்ன சொல்கிறாய்?

திரு:—அப்படி திடீரென்று சொல்லி விடமுடியுமா? வீட்டில் பெண்டுகளைக் கலந்தாலோசித்து நாளைக் காலையில் சொல்கிறேன்.

கிழவர்:—அப்படியே செய். இதை விட்டுவிட்டால் இம்மாதிரி நல்ல இடம் கிடைக்காது. ஜாக்ரதை. வேறு எவன் வந்தாலும் உனக்குக் கையில் பணங்கொடுத்துச் செய்ய சம்மதிக்கமாட்டான். 100 ரூபாய்ரொக்கம் கொடுக்கிறானும். குழந்தைக்கு நகைபோடுகிறானும்.

திரு:—சரி மனத்திற்குப் பிடித்துதானிருக்கிறது. நாளை சொல்லி விடுகிறேன்—என்று கூறி கிழவரை யனுப்பிவிட்டுத் தன் மனைவியை நோக்கி, "என்ன ஞானம்! கிழவர் சொல்லியதைக் கேட்டாயா! குழந்தைகுட்டிகள் தொல்லை இதிலும் இல்லை. பையனுக்கு வயது 28 தானும். நாணு சாஸ்திரி சொல்லியதைவிட இது தேவலையில்லையா!

ஞா:—அப்படித்தான் நானும் நினைக்கிறேன். குழந்தைகள் தொல்லை இல்லாதிருந்தாலே போதும்......என்று முடிப்பதற்குள் நித்யா ஆவேசங் கொண்டவள்போல் எழுந்துவந்து,

அம்மா! என்னைவிட அநுபவத்திலும் வயதிலும் நீ எத்தனையோ பெரியவளாகவிருக்கிறாய். இருப்பினும் நீங்களிருவரும் பேசும்வார்த்தைகள் எனக்குச் சற்றுகூடப் பிடிக்கவே இல்லை. குழந்தைகள் இல்லாத கிழவன், கட்டை தடியன்களாகவிருந்தால் மிகவும் உயர்வு என்று நினைக்கிறீர்களா! அம்மா! அப்பா! நான் அந்தமாதிரி இடத்தையே நரகமாக நினைக்கிறேன். என்காதில் நாராசம்போல் அவ்வார்த்தைகள் விழுகின்றன. இதனால் நான் ஏதோ உங்களுடைய அபிப்ராயத்திற்கு மீறி சிறுவனை மணந்து உங்களுக்குச் செலவை

உண்டாக்க நான் விரும்புவதாக நினைக்கலாம். அப்படி நான் முட்டாள்தனமாக நினைக்கவில்லை. உங்களுடைய நிலையை என்னிதயம் உள்ளபடி யறிந்து இரவு பகல் வருந்துவதை அந்த பகவான்தான் அறிவான். ஒரு தாரத்தை மணந்த பிறகு அவனை மணப்பதே என் மனத்திற்கு மிகவும் அருவருப்பாக விருக்கிறது. செடியிலிருந்து புதிதாகப் பறிக்கப்படும் புஷ்பத்திற்கும், அதைப் பறித்து ஒருவர் நுகர்ந்து கசக்கி மணங்குறைந்த புஷ்பத்திற்கும் வித்யாஸமில்லையா! அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. குழந்தைகள் வேண்டா மென்றும், கையை உதறிய கட்டைத் தடியன் வேண்டுமென்றும் இனிமேல் சொல்லவேண்டாம்.

அம்மா! எப்போது ஒன்றுக்கு இரண்டு தாரங்களை இழந்து மூன்றாவது தேடுகிறானோ அவனிடம்- கொனஷ்டைகளும், சந்தேகமும், நம்பிக்கைக் குறைவும், கண்டதற்கெல்லாம் குஜோத்யமும் கட்டாயம் தோன்றும். எங்கோ நூற்றில் ஒருவர் இருவருக்கு மேற்குறித்த குணங்களில்லாமலிருக்கலாம். பெரும்பாலானவர்களின் தன்மை இதுதான். அவர்களுக்கு இந்த இளம் மனைவியிடம் சதாசந்தேகம்தோன்றும் உபத்திரவத்தால் அவர்களுக்கும் சந்தோஷமில்லை; அவர்களுக்கு மாலையிட்டப் பாவிகளுக்கும் சுகமில்லை.

தாயார் இடைமறித்து..."நித்யா! இதென்ன ப்ரஸங்கம்போல் பேசிக்கொண்டே போகிறாயே!...பெரியவர்களாகிய எங்களுக்குத் தெரியாத விஷயமா நீ கற்றுக்கொண்டாய்?"...என்று கூறி முடிப்பதற்குள் நித்யா சாந்தத்துடன் பேசத்தொடங்கி,

"அம்மா ! நான்தான் முதலிலேயே சொன்னேனே! நீங்கள் பெரியவர்கள்தான். இல்லை என்று நான் சொல்லவில்லை. கிழவனுக்கு வாழ்க்கைப்படும் விஷயத்தைப் பற்றி நீங்கள் ஒரு சிறிதும் சிந்தித்திருக்கவே நியாயமில்லை. அதற்கு அவகாசமில்லை. இளமை முற்றி, மனத்திற்குப் பலவிதத்திலும் துன்பங்கள் நேர்ந்த இக்காலத்தில் அதைப்பற்றி நினைக்க நேரமேது? நான் தங்களைக் குறைகூறுவதாக நினைக்கவேண்டாம்.

கடவுள் என் தலைவிதியை இம்முறையில் மாற்றியதை யறிந்த பிறகு நான் இதுவிஷயமாய் இரண்டாந்தாரம் செய்துகொண்டவர்களையெல்லாம் கவனித்து வருகிறேன். அது விஷயமாயுள்ள கதைகளைப் படித்தும் வருகிறேன். சந்தேகப்ராணியுடன் சஞ்சலப்பட்டு வாழ்க்கை நடத்துவதா ஒரு இன்பம்? இல்லை: இல்லை. அது துன்பத்திலும் துன்பந்தான்.

இந்தமாதிரியான தர்மசங்கடத்தில் ஒருவிதத்திலும் இகத்திற்கும் பரத்திற்கும் ஒரு உபயோகமும் இன்றி வாழ நான் பிரியப்படவில்லை. கிழவனை நான் மணப்பதற்குச் சற்றும் தியங்கவில்லை.நான்கு குழந்தைகள் இருப்பவனைப் பாருங்கள். அக்குழந்தைகளின் வளர்ப்பினால் நான் பேரின்பமே அடைவேன். அதுவே எனக்குப் பொழுதுபோக்கும், இன்பமும் தரும் என்பதை நான் என்னிதய பூர்வமாக நம்புகிறேன். இது வெறும் விளையாட்டுப் பேச்சல்ல...

ஞா:—என்ன! என்ன! நீ ஆராய்ச்சி செய்தாயா!...குழந்தைகளுள்ள இடந்தான் வேண்டுமா! இதென்ன விசித்திரம் நித்யா!

நித்:—ஒரு விசித்திரமும் இல்லையம்மா! நான்கு குழந்தைகள் இருக்கும் மனிதன் கல்யாணம் செய்துகொள்ள விரும்புவதே அவனுடைய குழந்தைகளின் பாதுகாப்புக்காகவும், தனக்கு உழைப்பதற்காகவுந்தான் என்பதைக் கூறவேண்டுமா! அந்த எண்ணத்தில் அவனுக்கு மேற்குறித்த விஷயத்திலேயே புத்திபோகும். சந்தேகத்திற்கு அதிக இடமிருக்காது. மணந்த பெண்ணுக்கும் குழந்தைகளின் வளர்ப்பில் சிரமமில்லாது பொழுது கழியலாம். குழந்தைகளிடம் பக்ஷமாக அன்புடன் நடத்துகிறவர்களுக்குத் துன்பமே இராது. குழந்தைகள் இல்லாத மனிதனுக்கு சந்தேகத்தைத் தவிர சாந்தியே கிடையாதம்மா! இதை நான் பலரிடம் கேட்டறிந்தேன். வயதில் சிறியவளாயினும் விசாரணையில் பெரியவள் என்று நினைக்காதீர்கள். அடுத்த தெருவிலுள்ள ரிஜிஸ்ட்ராரின் மனைவியைச் சிலமாதமாக எனக்குப் பரிச்சயமுண்டு. அவர்களின் வாழ்க்கையே எனக்கு ஆதாரம் போதும். நம்மைப்போன்ற ஏழைவீட்டுப் பெண்ணுகையால் அவருக்கு மூன்றுந்தாரமாகச்செய்து கொடுத்துவிட்டார்களாம். அந்தம்மாள் படும் இம்சை சொல்லமுடியாது. யாருடனும் பேசக்கூடாதாம். எச்சில் இலை எறியக்கூட வீதியில் போகக்கூடாதாம். வீதியில் எத்தகைய ஊர்வலமோ, ஸ்வாமியின் புறப்பாடோ, எது வரினும் பார்க்கக்கூடாதாம். திடும்திடும் என்று "யாருடன் நீ இத்தனைநேரம்பேசினுய்?...இப்போது போனவன் யார்?" என்றெல்லாம் அம்பு எய்துவதுபோல் கேட்கிறுனும். தனியறையில்போட்டுப் பூட்டவும் தயாராகவிருந்தானும்.இந்த ஹிம்சைகள் தாங்காது அந்தம்மாள் கிணற்றில் விழவும் துணிந்தார்களாம். இவைகளைக் கேட்கும்போது எப்படி இருக்கிறது? இதுபோல் இன்னும் பலரிடமும் நான் விஷயமறிந்திருக்கிறேன். அம்மா! கிழவனை மணப்பது மணக்கையில் குழந்தை குட்டிகளுடன் பணக்காரனுயிருந்து உங்களையும் ஆதரிக்கக்

கூடியவன் எவன் வருகிருனோ அவனைத்தான் நான் மணப்பேன். வேறும் வரண்ட கை எனக்கு வேண்டாம். என்னை மன்னிக்கவும். உங்களுடைய பாதுகாப்பிற்காக நான் இந்த தீர்மானத்தை ப்ரமாண பூர்வமாகச் செய்துவிட்டேன். இந்த வரன் வேண்டாமென்று சொல்லியனுப்புங்கள்'' என்று படபடப்பாகக் கூறினுள்.

இதைக்கேட்ட தம்பதிகள் கல்லாய்ச் சமைந்தார்கள். ''நித்யா வுக்கு இத்தனை விஷயங்கள்கூடத் தெரியுமா?'' என்று வியப்புற்ருர்கள். ஞானம் சற்றுதெளிந்தவளாய் நித்யாவை நோக்கி ''அம்மா! குழந்தாய்! உன் கருத்தை யறிந்தேன். நாங்கள் எப்பாடு பட்டே னும் உன்னைச் சிறிய வாலிபனுக்குக் கொடுத்துக் கல்யாணத்தைச் செய்கிருேம். நீ கவலைப்படாதே'' என்று முடிப்பதற்குள்,

''அம்மா! நான் அந்தமாதிரி வெறிபிடித்தவள் என்று நினைக் காதே. நான் உங்கள் வயிற்றில் பிறந்ததற்காக உங்கள் சுக துக்கத் தில் பங்கெடுத்துக்கொள்ளும் உரிமை எனக்கில்லையா! தம்பியி னுடைய க்ஷேமத்திற்கும் உங்களுடைய பிற்கால வாழ்க்கைக்கும் அனுகூலத்தைக் கொடுக்கும்படி என்னுடைய எதிர்காலத்தின் திட்டத்தைக் கடவுள் வகுக்கவேண்டியே இரவு பகல் பிரார்த்தனை செய்கிறேன். உங்களுக்கு அனுகூலத்தைச் செய்யாத நான் என்ன மனுஷி? இப்பொழுது அப்பாவும் நீயும் என்னுல் படும் துன் பத்தை நான் அறியவில்லை என்று நினைக்கிறீர்களா! என் மனம் படும் வேதனையை எடுத்துக்கூறவே முடியாது. நீங்கள் இனிமேல் இப்படி ச்ரமமே படக்கூடாது. என்னுல் தாளவே முடியவில்லை.

முன்பொரு நாள் நாணு சாஸ்திரிகளே வந்து நாராயணன்பட் டியில் ஒரு வரனிருப்பதாயும், குழந்தைகள் இருப்பதாயும் சொன் ஞர்களே! அந்த இடத்தையே விசாரித்து ஏற்பாடு செய்யுங்கள். அதுதான் எனக்கு இஷ்டம்'' என்றதைக் கேட்ட ஞானத்திற்கு மனது அதிர்ச்சியினுல் திக்குதிக்கென்றது. ''நித்யா! மூத்தவளின் குழந்தைகளை வைத்து ரக்ஷித்து நற்பெயர் எடுப்பதென்ருல் அது சாமான்யமானதென்று நினைக்கிருய்? சண்டையும், அபக்யாதியும், விரோதமும், மாற்றுந்தாய் கொடுமை என்கிற பட்டப்பெயரும் உல கத்தில் நிரம்பியிருப்பதை நீ அறியாயம்மா! இளையவளாய் வாழ்க் கைப்பட்டு வாரிக்கொள்ளும் சுகம்போதும் என்றல்லவா தோன் றும்'' என்ருள்.

நித்:—அம்மா! நான் சகலமும் அறிவேன். 100 க்கு 99 பேர் கொடுமை செய்யும் மாற்றுந்தாயாகவே இருந்தாலும் ஒருத்தி நல்ல

மாதிரியாக நடத்தும் புண்ணியவதி இருந்ததே இல்லையா ?

ஞா:—நித்யா! தனக்குக் குழந்தை பிறக்கும் வரையில் ஒரு மாதிரியாய் ப்ரீதியுடன் இருந்தவர்கள்கூட தனக்குப் பிறந்தபிறகு மாற்றாந்தாய் என்கிற திரையினால் மூடப்பட்டு மாறிவிடுகிறார்கள். அப்படிக்கிருக்க,

நித்:—(இடைமறித்து) அம்மா! இந்த வீண் வார்த்தைகளெல்லாம் வேண்டாம். என்னால் இனிமேல் நீங்கள் ஒரு கஷ்டங்கூடப் பட நான் பார்த்துச் சகிக்கமாட்டேன். உங்களைக் காப்பதற்கு என்னால் எந்தவிதமான பாடுபடமுடியுமோ, அதைப் பட்டே தீருவேன். இதைத் தடுக்கமுடியாது. ஏதோ முன்பகட்டாயுள்ள அழகைக்கண்டு சிலர் மணப்பதாகச் சொல்லிவிடலாம்; மணக்கவும் மணக்கலாம். பிறகு "சீரில்லை, சிறப்பில்லை" என்று காக்கை கொத்துவதுபோல் கொத்துவார்கள். ஏற்கெனவே கஷ்டப்படுகிறவர்கள் இன்னும் எப்படித்தான் வருந்த நேரும்? இந்தப் பாழும் உலகத்தின் விசித்திரங்கள் ஒன்று! இரண்டா!

அம்மா! இதோ நாம் கண்ணாரக் காணவில்லையா! அப்பாவுக்குக் கண்ணும் நன்றாகத் தெரிந்து உத்தியோகத்திலிருந்தபோது அப்பாவுடைய பந்துக்களும் உன்னுடைய பந்துக்களும் அடிக்கடி குலாவவருவதும், தேரென்றும், திருவிழாவென்றும், நோய் என்றும், கல்யாணமென்றும் சாக்குச் சொல்லிக்கொண்டு வந்து அப்பாவின் சொல்ப சம்பளத்தில் அளவற்ற செலவும் கடனும் வைத்தார்களே! இப்போது அப்பாவின் கண்ணும் போய் வேலையும் போய் சோற்றிற்கில்லாது திண்டாடுகிறோமே! எந்த காக்காயாவது ஏன் பாவி என்று கேட்கிறதா! அவர்களில் எத்தனை பெயர்களுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். உபகாரம் செய்யவேண்டும் என்றிருந்தால் ஒருவராவது என்னை மணப்பதற்கு முன்வரமாட்டார்களா! வீண் ப்ரமை உனக்கெதற்காகம்மா! நீங்கள் சாந்தியடையுங்கள். கவலை வேண்டாம்" என்று சட்டம் போட்டுப் பேசுவதுபோல் பேசினாள்.

அதற்குமேல் தாய் தகப்பன் இருவரும் மவுனமே குடிகொண்டார்கள். கண்ணீர் வழிந்தோடியது. பேசுவதற்கு நாவெழவில்லை. பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை என்பது பழமொழி. பொருளும் விழியும் சேர்ந்தில்லார்க்கு...என்று திருமூர்த்தி நினைத்தபோது குடல் குமுறியது.

3

"வாங்கோ! வாங்கோ! உங்களைத்தான் ரெண்டு நாட்களாய் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். விஷயந்தான் தெரியுமோன்னோ!" என்று 60 வயதுக்கு மேற்பட்ட கிழவியொருத்தி அங்கு வந்த கிழவரைப் பார்த்துக் கேட்டாள்.

கிழ:—உம். விஷயந் தெரியாமலென்ன! தெரிந்துதான் வந்தேன். கொடுத்துவைக்காத பாவிப் பெண் தொலைந்தது. இனி அதைப் பற்றிக்கவலைப்பட்டு பிரயோஜனம் என்ன?....அழகென்றால் ரதிக்குச் சமதையாகக் கூறலாம். அப்படிப்பட்ட கிளி ஒன்று பார்த்துக் கொண்டுதான் இங்கு வந்திருக்கிறேன். பெண்ணுக்கு 16 வயது முடியப்போகிறது. நல்ல கட்டுமத்தான சரீரம், செந்தாழம்பூ நிறம், தாமரை இதழைப்போல் கண்கள்; மூக்கின் கூர்மையும் நேர்மையும் அந்த அழகு ஒன்றே போதும். படத்தில் எழுதிப் பார்க்கும் அழகு என்றால் சந்தேகமே இல்லை.

கிழவி:—நீங்கள் சொல்வதைப் பார்த்தால் ப்ரமாதமாயிருக்கிறதே! அப்படிப்பட்ட பெண் நமக்குக் கிடைக்குமா! அழகுக்கே போட்டிவாராதா! அதோடு மூன்றுந்தாரமென்றால் அந்தப்பெண் சம்மதிக்குமா! பெற்றவர்கள்தான் கொடுப்பார்களா!...இதில் உம்முடைய சாமர்த்தியந்தான் வேண்டும். அவனை ஒண்டிக்கட்டையாய்ப் பார்க்கவே முடியவில்லை. அவனுக்கென்ன அந்தஸ்து இல்லையா! கிழமா! கிட்டா! இன்னிக்கெல்லாம் இருந்தால் 45 வயது கூட ஆகவில்லை. ஆண் மகனுக்கு இதொரு வயதா! உமக்குக்கூட 60 வயதாகிறது. உமது கடைசி பெண்ணுக்கு 4 வயது தானே ஆகிறது.

கிழவர்:—இதென்ன விநோதமாய் பேசுகிறீர்களே! அவருக்குள்ள உத்யோகமென்ன! மதிப்பென்ன! ராவ்பகதூர் பட்டமென்ன? மன்மதன்போன்ற ரூபமென்ன? 45 வயது ஒரு ப்ரமாத வயதா! சிலரைப்போல் தரித்திரமா! மூத்தவள் குழந்தைகளாவது 7-8 வசவச என்று இருக்கிறதா! பொறுக்கினாற்போல் நாலே நாலுதான் இருக்கு. அவருக்குப் பெண் கொடுக்க யாருக்காவது கசக்குமா என்ன?...அந்தப் பெண்ணைப் பார்த்தால் சாக்ஷாத் மகாலக்ஷ்மி என்றே கூறலாம். அழகிருக்கிறது. அதிர்ஷ்டமில்லை. பரம ஏழை. தகப்பனுக்கு கண் கிடையாது. இத்தனை அழகாயிருப்பதற்கு அதுவே ஒரு பணக்காரன் பெண்ணாயிருந்தால் விடாமல் நம்பயாதவனுக்கு முடித்துவிடுவேன். ரெண்டுவயது ஈடு இருக்கிறதே

போதும் என்றுகூடச் சொல்வேன்...

கிழவி:—அதோ! கார் ஓசை கேட்கிறது. ஹரிஹரன்கூட வந்து விட்டான். நல்ல சகுனமாயிற்று. எப்படியாவது நீங்கள் தயவு செய்து அணைந்த விளக்கை மறுபடியும் ஏத்திவைத்தால் போதும். புண்ணியமுண்டு.—என்று முற்றுப்புள்ளி வைப்பதற்குள் க்காரி லிருந்து ஆடம்பரமாக ஹரிஹரன் இறங்கி வந்தார்.

"அடேய் முருகேசா! காரைக்கொண்டுபோய் பள்ளிக்கூடத்தி லிருந்து குழந்தை ஸுதாவை அழைத்துவா!" என்று கிழவி தனது அதிகாரத்தை வந்தவர் அறியும் பொருட்டுக் கூறினாள். 'தினம் செய்யும் காரியத்திற்குச் சொல்லவேண்டுமா!' என்று முருகேசன் முணுமுணுத்துக்கொண்டே போய்விட்டான்.

கிழவர்:—வாருங்கோ! போனதைப்பற்றிப் பேசவே வேண் டாம். அவளே திரும்பிவந்துவிட்டாற்போலத்தான் நிச்சயமாகி விட்டது. ரதிதேவி என்றால் அவளுக்குத்தான் தகும். நான் நேற்று போய் பார்த்தேன். உங்களை மட்டும் நேரே அழைத்துப்போகலா மென்றுதான் வந்தேன். இன்றிரவு வண்டிக்கே புறப்படலாமா?....

கிழவி:—சேச்சே! காரிலேயே நேரே போகலாம். ரயில் வேண் டாம். விடியற்காலை மூன்று மணிக்குக் கிளம்பினால் உதயத்திற்கு போய்ச்சேரலாம்.என்னசொல்கிறாய்? -என்று சட்டம்போட்டாள்.

ஹரி:—அப்படியே செய்வோம்மா! அடுத்தமாதமே நான் ஒரு ஜமாபந்திக்குப் போகவேண்டியிருக்கிறது. அதற்குள் இந்த காரி யத்தை முடித்துவிடவேண்டும். என்ன ஏற்பாடு செய்திருக்கி றீர்கள்?—என்று கிழவரைக் கேட்டார்.

கிழவர்:—பரம ஏழைகள். விஷயந் தெரியாதா! கையில் ஏதோ கொடுத்து கல்யாணத்தை முடிக்கலாம். ஒரு கஷ்டமும் இல்லை. சரி. விடியற்காலையில் கிளம்புவோம்—என்று விடைபெற்றுச் சென்றார்.

ஹரிஹரன் உடையைக்களைந்துவிட்டு மாலை ஆகாரம் கொஞ்சம் பார்த்தபிறகு வாக்கிங்போகப் புறப்பட்டார். தினம் அவருடன் கூடத் தன் பசங்களையும் கடற்கரைக்கு அழைத்துப்போகும் வழக்கம்போல் அன்றும் அழைத்துச்சென்றார்.

மூத்த ஸம்ஸாரத்திற்கு முதல் ப்ரஸவமே இரட்டைப்பிள்ளைகள் பிறந்தன. அதற்கு முறையே, யாதவ், மாதவ் என்று அருமையாகப் பெயரிட்டார்கள். அந்தம்மாள் தன் பிள்ளைகளுக்கு இட்ட பெயரை வாய் சலிக்கக் கூப்பிடும் பாக்யங்கூடப் பெறாது பரலோக ப்ராப்தி ரானாள். போகும்போது யாதவனை மட்டும் தனியேவிட்டு மற்ற

வனை அழைத்துக்கொண்டு போய்விட்டாள்.

இரண்டாந்தாரமாக வந்த புண்யவதி மூன்று குழந்தைகளைப் பெற்று சிறிது ஓய்வுடன் குடும்ப பாரத்தை நடத்தினள். ஹரிஹரனுக்கு இதயத்தில் தயாளகுணமோ, ஈவிரக்கமோ ஒன்றுமில்லையெனினும் யார் செய்த புண்ணியமோ, அதிர்ஷ்டத்திற்குமட்டும் பஞ்சமில்லை. படிப்பும் சொல்பந்தான். ஆனல் தக்காருக்குத் தக்க படி கூழைக்கும்பிடு போட்டு காக்காய் பிடித்து பதவியில் உயர்ந்து ராவ்பகதூர் பட்டமும் பெற்றுவிட்டதானது அவருக்கும் அவருடைய தாயாராகிய ஸ்ரீமதி குப்பம்மாளுக்கும் தலை கழுத்தின்மேலேயே நிற்காது துள்ளவாரம்பித்தது.

தாங்கள் மனிதர்கள் என்பதைக்கூட மறந்து மிருகம்போல் நடக்கலானர்கள். உத்தியோக முறையில் லஞ்சம் வாங்குவதில் இவரைவிடத் தேர்ச்சி பெற்றவர்கள் உலகிலேயே இல்லைஎன்கிற முறையில் வெகு ஒழுங்காய் வேலைசெய்து வந்ததில் ஏராளமான பொருள் சேரத் தொடங்கியது. மகனுக்குமேல் குப்பம்மாள் நைஸாகப்பேசி லஞ்சம் வாங்குவதில் தேறினள்.

காரியமாக வீட்டிற்குத் தேடிக்கொண்டுவரும் மனிதர்களிடம் வெகு தந்திரமாகப்பேசி நன்றாகக் கறந்துகொள்வதில் முதல் ஸ்தானத்தைப் பெற்றுவிட்டாள். கொளவி என்கிற பூச்சி ஒரு புழுவைப் பிடித்து அதை ஓயாமல் தேள்போல் கொட்டிக் கொட்டித் தன்னைப்போன்ற வடிவம் கொடுப்பதுபோல் குப்பம்மாள் தன் இரண்டாவது மருமகளுக்கு தனது ஒப்பற்றகுணத்தின் விசேஷத்தையும் செய்கையின் சிறப்பையும் அப்படியே கற்றுக்கொடுத்து தன்னிலும் சிறந்தவளாகச் செய்துவிட்ட பெருமை அவளுக்கே பிடிபடவில்லை. தனக்கு சகல அம்சத்திலும் இத்தனை ஒற்றுமையாக விருந்தமருமகளின் மறைவு குப்பம்மாளுக்குப் பெரும் நஷ்டமாயும், கஷ்டமாயும் இருந்தது. வரக்கூடிய பெண் தனக்கொத்தமாதிரியாக வரவேண்டுமே என்ற கவலை நிரம்பியிருந்தது. குப்பம்மாள் மூத்த மருமகளைப் படுத்தி வதைத்த கெட்டபெயர் அவள் இறந்தாலும் கூட மறையாதபடி ப்ராபல்யமானது, இளையவளால் ஒரு கடுகளவு குறையவாரம்பித்தது. அதற்குள் மருமகள் போய்விட்டதால் அதுவும் வருத்தமாகவே இருந்தது.

இன்று கிழவர் வரன் கொண்டுவந்ததும் கிழவிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. ஏனெனில் இதற்கு மத்தியில் குப்பம்மாளே சுமார் பத்து பெண்களுக்குமேல் விசாரிக்கச் செய்தாள். "இந்த கிழவனை

யார் மணப்பார்கள்?" என்று குத்தலாகச் சொல்லிப் பரிகஸித்து விட்டதால் குப்பம்மாளுக்குக் கோபம்வந்த வேகத்தில் கலியாணத் தரகனுக்குப் பணங்கொடுக்கும் நஷ்டம் வந்தாலும் வரட்டும் என்று துணிந்து ஏற்பாடு செய்தாள்.

ஸுதாவுக்கு வயது 12 ஆகிவிட்டது. தாயாரின் மறைவினால் அவளுக்கு மிக்க ஏக்கமும் விசனமும் தெரிந்து நினைத்து, நினைத்து அழுவாள். தனக்குச் சின்ன குழந்தைகளைத் தேற்றி சமாதானம் செய்வதில் அவள் தன் விசனத்தை அடக்கிக்கொண்டு புத்திசாலியாய் விளங்கினாள். சின்ன குழந்தை அடிக்கடி "அம்மா! எப்போ வருவாள்?" என்று கேட்டு அழும். அச்சமயங்களில்தான் ஸுதாவின் விசனம் உச்சத்தையடையும்; அவளாலும் சமாளிக்கமுடியாது புலம்புவாள். 'அம்மா நாளைவருவாள், மறுநாள் வருவாள்' என்று சமாதானம் செய்வாள். இன்று குழந்தை தர்மராஜு வெறி பிடித்துக்கொண்டு அழுவதை ஸுதாவால் சமாதானமே செய்ய முடியாது போய்விட்டது.

இந்த கோராமையைக் கண்ட ஸுதா "ஐயோ! அம்மா! நீ போனபோக்கில் இந்த குழந்தையையும் கொண்டுபோயிருக்கக் கூடாதா! இந்த அவஸ்தையை என்னால் படமுடியவில்லையே? என்று கண்ணீர் விடும்போது, குப்பம்மாள் அங்கு வந்து "சீ அசடே! கன்னா பின்னா என்று உளறுதே. நம்மாத்தில் கல்யாணம் வரப்போகிறது. உங்களுக்கு அம்மா வரப்போகிறாள்." என்றாள்.

இதைக்கேட்ட ஸுதா வியப்பினால் உந்தப்பட்டவளாய், "கல்யாணமா! யாருக்கு பாட்டீ! நம்ப யாதவண்ணாக்கா கல்யாணம்?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

கிழவி:—அண்ணாவுக்கு இப்போதில்லை. அடுத்த வருஷந்தான் கல்யாணம். இப்போது உங்கப்பாவுக்குக் கல்யாணம்...

ஸுதா:—என்ன! என்ன! அப்பாவுக்குக் கல்யாணமா? நம்ப மாமா-தாதாவும் பாட்டியும் சஷ்டிபூர்த்திக் கல்யாணம் பண்ணிண்டாளே, அதுமாதிரியா பாட்டீ!

குப்பம்மாள்:—சீச்சீ! அசடே! அதுமாதிரி ஒண்ணுமில்லே. மாமா-தாதாவைப்போல் ஒங்கப்பா கிழவனா? அறுபது வயதான கிழவனுக்குத்தான் சஷ்டிபூர்த்தி பண்ணுவார்கள் தெரியுமா! இன்னும் எத்தனையோ வருஷம் கழித்து உங்கப்பாவும் சஷ்டிபூர்த்தி பண்ணிக்கொள்வான். அதற்குள் உனக்குக்கூட நாலைந்து குழந்தைகள் பிறந்துவிடும். ஒங்கப்பாவுக்கும் மனைவி வேண்

டும். உங்களுக்கும் தாயார் வேண்டும். எனக்கும் நாட்டுப்பெண் வேண்டும். அதற்காக கல்யாணம் பண்ணிக்கொள்ளப்போகிறான்.

ஸுதா:—ஏம் பாட்டீ! எங்கம்மாவைப்போல் எங்களிடம் ஆசையாயிருப்பாளோ! எதுத்தவீட்டுக் கல்யாணிக்குக்கூட தாயார் இல்லே. சித்தின்னு ஒத்தி வந்திருக்காளே, அதுமாதிரியா!

குப்:—ஆமாம். அதேமாதிரிதான்.

ஸுதா:—ஐயையோ ! அப்படின்னு கல்யாணியைப்போல் நாங்களும் சதா அடிபட்டுச்சாகவேண்டுமா! பாவாடைகூட நல்லதா வாங்கித்தரமாட்டேன் என்கிறாளாம். பள்ளிக்கூடம் போகக் கூடாது என்கிறாளாம். வீட்டில் சகல வேலைகளேயும் செய்யும்படித் திட்டுகிறாளாம். அப்படியெல்லாந்தானே எங்களுக்கும். வேண்டாம் அப்பாவுக்குக் கல்யாணமே வேண்டாம்...

குப்:—சீ...முட்டாளே! தத்துபித்து என்று உளறுதே. சிறுசாய் லக்ஷணமாயிருப்பதைவிட்டு நாத்துப் பாட்டியைப்போல் பிதற்றுதே பேசாமல் போ!....என்று அதட்டிவிட்டுப் போய்விட்டாள்.

ஏற்கெனவே இருக்கும் வேதனேயுடன் ஸுதாவுக்குப் புதிய கலக்கமும் அச்சிறிய மனத்தில் புகுந்துகொண்டது. எதிர்வீட்டுப் பெண்ணும் இவளும் பள்ளிக்கூட சினேகிதைகள். அதோடு வீட்டிலும் ஒன்றாக விளையாடிப் பழகுகிறவர்கள்; ஆதலால் கல்யாணி தனக்குற்ற துன்பங்களையெல்லாம் சுதாவிடம் சொல்லிக் கண்ணீர் விடுவாள். மாற்றாந்தாயின் ஆதிக்கத்தின் விபரீதத்தில் கல்யாணி பள்ளிக்கூடமும் நிறுத்தப்பட்டதோடு எதிர்வீட்டிற்கும் பக்கத்து வீட்டிற்கும் போய் விளையாடுவதற்கும் தடையுத்திரவு போடப் பட்டுவிட்டது. தன் வீட்டிலிருந்து எட்டிப்பார்க்கவும் அச்சிறுமி பயந்து நடுங்குவதைக் கண்ட சுதா பரிதாபப் படுவாள். 'அந்த கட்டத்தை தன் சரித்திரத்திலும் பகவான் புகுத்தி விடுவானோ!' என்று ஸுதா நினைக்கும்போது அவள் குழந்தை இதயம் குமுறியது. கல்யாணியின் ஒவ்வொரு விஷயமும் அவளுக்குக் கண்முன் தோன்றுவதுபோலாயிற்று. அதே ஏக்கம் திடீரென்று புகுந்துகொண்டதால் இரவு நித்திரையே கொள்ளவில்லை.

ஏதேதோ எண்ணமிட்டுத் தவித்தாள். மாற்றாந்தாய் என்கிற ஒரு பூதம் தன்னையும் தன் உடன்பிறந்தோர்களேயும் விழுங்கவருவது போன்றும் மிரட்டி இம்ஸிப்பதுபோன்றும் ஒரு பயங்கரக்கனவு கண்டு அலறி வாய்க்குளறினாள்.

அதே அறையில் மற்றொரு கட்டிலில் படுத்திருந்த ஹரிஹரன்

இந்த கோஷத்தைக் கேட்டு அலறியடித்துக்கொண்டு ஓடிவந்து ஸுதாவை யப்படியே அணைத்தவாறு "ஸுதா! ஸுதா! என்னம்மா சொப்பனங் கண்டே! ஏன் அலறுகிறாய்?" என்று கேட்டார்.

ஸுதா பயந்து நடுங்கியவாறு "அப்பா! அப்பா! ஒனக்குக் கல்யாணம் வேண்டாம்பா!...அந்தப் பிசாசு என்னையும் அம்பி, அங்கச்சி முதலியவர்களையும் விழுங்க வருகிறதப்பா!"....என்று கூறியதைக்கேட்ட ஹரிஹரனுக்குச் சப்பென்று ஒரு எரிச்சல் உண்டாகியது. "அட அபசகுனியே! சீச்சீ! தூங்கு. நான் என்னவோ என்று பார்த்தேன். பேசாமல்படுத்துக்கொள்ளு" என்று அதட்டிப் படுக்கவைத்துவிட்டு, மிருகத்தன்மையுடன் தான் வந்து படுத்தான்.

சுபமாகத் தான் கல்யாணம் செய்துகொள்ள நினைக்கையில் அபசகுனம்போல் வேண்டாமென்று சொல்லியதில் சற்று அச்சான்யமும் அபசகுனமும்போன்று தோன்றியதால் அந்த பச்சைக் குழந்தையின்மீது கோபமுண்டாகியது. ஸுதாவுக்கோ தகப்பனார் அலக்ஷியமாகக் கூறி அதட்டிவிட்டுப் போனதில் மனது பொங்கியது. குப்புறப் படுத்துப் புலம்பியபடியே வெகு நேரஞ்சென்று கண்ணயர்ந்தாள்.

பொழுது விடிவதற்குமுன்பே தன் தகப்பனாரும் கல்யாணத் தரகனும் காரில் போனது ஸுதாவுக்குத் தெரியாது. அவள் கண் விழிக்கும்போது குப்பம்மாள் மட்டும் ஏதோ வேலை செய்துகொண்டிருந்தாள். ஸுதா காப்பி குடிப்பதைக் கூட லக்ஷியம் செய்யவில்லை. தன் தகப்பனார் விவாகம் செய்துகொள்ளப்போகும் விஷயத்தை தன் சிநேகிதையுடன் சொல்லவேண்டுமென்று ஆசைப்பட்டாள். "பாட்டிக்குத் தெரிந்தால் திட்டுவாளே" என்று பயந்தபடியே மெல்ல வீதிப்பக்கம் போனாள்.

இவளுக்குமுன்பு எதிர்வீட்டுப் பெண் இந்த விஷயத்தை யறிந்து இவளைப் பார்த்து உபசாரம் சொல்வதுபோல் பேசவேண்டுமென்று வீதியில் காத்திருந்தாள். இவளைக் கண்டதும் அப்பெண் முன்கூட்டிஓடிவந்து, "ஸுதா! விஷயம் உனக்குத்தெரியுமோன்னோ! உங்கப்பாவுக்குக் கல்யாணமாம். இன்று விடியற்காலை 4 மணிக்கு முன்பே தரகனும் உங்கப்பாவும் கல்யாணம் நிச்சயம் பண்ணப் போய்விட்டார்களே!...உம்...என் கதிதான் உனக்கும் வந்துவிட்டது. என்ன பாபத்தைச் செய்தோ நான் பிறந்தேன். நீயும் அப்படியே பிறந்துவிட்டாயே!"...என்று ஒரு பெரிய பாட்டியைப் போல் பேசினாள்.

இதே சமயம் ஸுதாவின் பாட்டியும், அந்த பெண்ணின் மாற்ருந்தாயும் வெகு ஆவேசத்துடன் வீதிக்கு வந்து தம்தம் அதிகாரக் கொடியை நாட்டி அட்டகாசத்துடன் தம்தம் உரிமைகளைக் கையாளும் முறையில் இரு சிறுமிகளையும் நன்ருகத் திட்டியும் அடித்தும் இழுத்துக்கொண்டு போனர்கள்.

4

"ஞானம்! மணி என்னவிருக்கும்!" என்ருர் திருமூர்த்தி. கணீர் கணீர் என்று தானே அறிவிப்பதுபோல் பக்கத்துவீட்டு கடியாரத்தில் 7 அடித்தது. "ஒகோ! ஏழடித்துவிட்டதா! நித்யா என்ன செய்கிருள்? ஸ்நானம் செய்தாயிற்ரு! இப்போது நாம் என்ன செய்வதென்று தெரியவில்லையே! இன்று காலையில் சாஸ்திரி ஒருவரை அழைத்துவருவதாகச் சொல்லியிருக்கிருரே! என்ன பதில் சொல்வது?...சின்ன பிள்ளையாண்டான் ஒருவன் ஓட்டலில் சமையல் செய்பவன் இருக்கிருன் என்று கோடிவீட்டுக் கிழவர் சொன்னரே! அதைப் பார்க்கலாமா?" என்ருர்.

இதற்கு ஞானம் பதில் சொல்வதற்குள் நித்யாவே அங்கு வந்து "அப்பா! நான் எத்தனை தரம் சொன்னலும் நீங்கள் என் மனத்தை இப்படிச் சிதறவிடுகிறீர்கள்? சமையல்காரனும் வேண்டாம். சங்கடமும் வேண்டாம். சாஸ்திரிகள் சொல்லியவரையே தான் நிச்சயம் செய்யவேண்டும். நான் மனப்பூர்வமாய்ச் சம்மதிக்கும்போது வேறு என்ன வேண்டும்? வீண் கவலைவேண்டாம். அதோ கார் ஓசை கேட்கிறது. அவர்களாகத்தானிருக்கவேண்டும். அனுவசியமானகுழப்பத்திற்குஇடந்தராமல்காரியத்தைமுடியுங்கள்" என்று கூறுவதற்குள் கார் வாசலில் நின்றதுகேட்டு உள்ளேபோய் ஒரு பாயைக்கொண்டு விரித்துவிட்டு மறைவில் நின்ருள்.

ஞானத்திற்கோ, மனத்தில் திக்குதிக்கு என்று அடித்துக் கொள்கிறது. வந்த தரகன் "திருமூர்த்தி! வரனேடு வந்துவிட்டேன். இதோ அவாளே அவாளுடைய சொந்த காரில் வந்திருக்கிருர்கள். தங்கக் கம்பி என்ருல் ஆக்ஷேபனையே இல்லை. என்ன அருமையான குணந் தெரியுமா! அந்த குணத்தின் விசேஷத்திற்குத் தகுந்த உத்

யோகம், ராவ்பகதூர் பட்டம், ஏராளமான சொத்துக்கள் எல்லாம் நிறைந்திருக்கின்றன. ரூபத்திலும் மன்மதந்தான்'' என்று தமது தொழிலின் முறைப்படி அளந்துகொண்டே போனார்.

கதவின் இடுக்கால் ஞானம் மணமகனை உற்றுக்கவனித்தாள். முதலில் தூக்கிவாரிப்போட்டதெனினும் நல்ல அழகு இருந்ததால் ஒரு சிறிது ஆப்யாயமும் உண்டாகியது. நித்யாவும் அப்படியே கவனித்தாள். ஆனால் அவள் முகத்தில் எவ்விதமான மாறுதலும் உண்டாகவே இல்லை. அப்படியே அசையாத பிம்பம்போல் நின்றாள்.

திரு:—வரணும்! வரணும்! இப்படி உட்காரவேண்டும். சாஸ்திரிகளே! அவாளுடைய பெருமையைப்பற்றி நன்றாக அறிவேன். ஏதோ, குழந்தையின் பாக்யமும் அதிர்ஷ்டமுந்தான் இந்த சம்மந்தத்தைக் காட்டியிருக்கிறது. நானோ அந்தகன். எனது விஷயங்கள் பூராவும் அவாளுக்குச் சொல்லிவிட்டீர்களா?'' என்றான்.

ஹரி:—ஆஹா!...எனக்குச் சகல விஷயமும் தெரியும். இனிமேல் நீங்கள் வேறு, நான் வேறு என்கிற வித்யாஸமே வேண்டாம். நாம் ஒரே குடும்பம் என்றே தீர்மானித்துவிட்டோம்...என் பையனுடன் உங்கள் பையனும் சேர்ந்து படிக்கட்டும். நீங்கள் எதற்கும் கவலைப்படவேண்டாம்.எங்கேகுழந்தை?-என்று தானேகேட்டான்.

ஒருவரும் கூப்பிடாமலேயே நித்யா வெகு தைரியத்துடனும் தெம்பாயும் எதிரில்வந்து நமஸ்காரம் செய்து,சுவர்ணப்பதுமைபோல் நின்றாள்.

இரண்டு ரூபாய் தாளும்படியான சாதரண மில் சேலையும், இரண்டணா தாளும் சீட்டி ரவிக்கையும், ஒரு அணா மதிப்புள்ள கண்ணாடி வளையல்களும், ஒன்னரை அணா விலையுள்ள கண்ணாடி கருகுமணியும், முகத்தில் அலங்காரமாயும் கம்பீரமாயும் பெரிய குங்குமப் பொட்டுந்தவிர வேறு ஒரு சல்லிக்காசுக்குக் கூட நித்யாவின் மேனியில் ஏதுமில்லை. இந்த அல்ப பூஷணங்களே அவளது அழகுக்கு அழகு செய்ததுபோலிருந்தன. தலையில் நல்ல அழகான நீண்ட கூந்தல் ஒன்றே அவளுடைய வதனத்தின் எழிலுக்குச் சிகரம்வைத்ததுபோல் ப்ராகாசித்தது. நித்யாவைப் பார்த்தவுடனே ஹரிஹரனுக்கு அப்படியே சொக்கிப்போய் தேன்குடித்த நரியைப் போலாகிவிட்டது. தன்னெதிரில் நிற்பவள் சாதாரணப் பெண்ணா, அன்றி தேவதையா! ஸ்ரீ மகாலக்ஷ்மியின் அம்சமா? என்கிற சந்தேகம் உண்டாகிவிட்டது.

இத்தனை அழகானப் பெண்ணை இதுவரையில் அவன்பார்த்ததே

இல்லையாதலால் வெகுவாய் லயித்துப்போய் இப்போதே அனுப்பினால் அழைத்துப்போய்விடவும் மனத்தில் கோட்டைகட்டிவிட்டான்.

நித்யாவும் ஹரிஹரனை நன்ருகப் பார்த்தாள். பின் தலைகுனிந்தாள். அவளால் தடுக்கமுடியாது பலபலவென்று எப்படியோ கண்ணீர் முத்துமுத்தாய் உதிர்வதை மெல்ல சாமர்த்தியமாக வியர்வையைத்துடைப்பதுபோல் துடைத்துக்கொண்டு உள்ளேபோனாள்.

ஞானு:—நித்யா! நீ ஏதோ வீண் பிடிவாதம் செய்வதுபோல் தோன்றுகின்றது. இதை வேண்டாமென்று தட்டிவிடுகிறேன். அந்த ஓட்டல்காரப் பையனை...

183053

நித்யா:—(ஆக்கிரத்துடன் இடைமறுத்து) அம்மா! நீ பேசாமலிரு. என்னைப் பெற்றதனால் நீங்கள் அடைந்தலாபம் ஒன்றுமே இல்லை. உங்களுடைய வயிற்றில் பிறந்ததாகவுள்ள நான் உங்களுடைய சுகதுக்கங்களைக் கவனித்து ரக்ஷிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லையா! வயது முதிர்ந்திருப்பதைப்பற்றி நான் கவலையே படவில்லை. கடைசீவரையில் உங்களை யார் ஆதரிக்கின்ருரோ அவரையே நான் மணப்பது என்கிற சங்கல்பத்தைச் செய்துகொண்டேன். அதற்கு இவர் இசையாவிட்டால் நான் மணப்பதில்லை. நீங்கள் தயவுசெய்து எதுவும் செய்யவேண்டாம்—என்று தாயாரை அடக்கினாள்.

தரகன்:—என்ன திருமூர்த்தி! மேற்கொண்டு ஆகவேண்டியதை முடித்துவிடலாமே! என்னென்ன கேட்கவேண்டும்?" என்ருர்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த நித்யா, தானே தைரியமாகப் பேசத் தொடங்கி, "உங்களுடைய போஷணைக்காக முதலில் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்துவிடவேண்டும். என் தம்பியை என்னுடன் கூடவே வைத்துக்கொண்டு படிக்கவைத்து விருத்திக்குக் கொண்டுவந்து அவனைக் கைதூக்கி விடவேண்டும். இவ்விரண்டுக்கும் யார் சம்மதப்படுகிருர்களோ அவர்களைத்தான் நான் மணப்பது என்று பகவான் முன்னிலையில் ப்ரதிக்ஞை செய்திருக்கிறேன். இதை நிறைவேற்றுவதாயின் உடனே முகூர்த்தம் வைக்கலாம்" என்று தன் மனதில் உள்ள உணர்ச்சியை உடைத்துக்காட்டுவதுபோல்கூறினாள்.

இதைக்கேட்ட திருமூர்த்திக்கே வியப்பால் அதிர்ச்சி உண்டாகியது. ஹரிஹரனுக்கு முதலில் தூக்கிவாரிப்போட்டதெனினும் நித்யாவினுடைய அழகின் கவர்ச்சி அவனை நன்ருகக் கட்டுப்படுத்திவிட்டதால் சிறிது தியங்கினான். "தாயாரைக் கேட்கவேண்டுமா!" என்று சற்று யோசித்தான். "உம் அவளை என்ன கேட்பது? காரியம் ஆகவேண்டுமாயின் ஒப்புக்கொண்டுதானே தீரவேண்டும்"

என்று தானே முடிவு கட்டிக்கொண்டு கிழவரை நோக்கி "குழந்தையை இப்படிக் கூப்பிடுங்கள்" என்றான்.

நித்யா தயாராக, தானே வந்து நின்றாள். "உன்னிஷ்டப்படியே உன் பெற்றோர்களையும் உடன்பிறந்தோனையும் ஆதரிக்கிறேன். அவர்கள் இன்று முதலே உன்னோடுகூட நம்ம வீட்டிலேயே இருக்கட்டும். என் தாயார் தள்ளாதவள். உன் தாயார் உன்னோடு இருப்பதால் உனக்கு நிரம்பவும் ஆதரவும் திருப்தியும் உண்டாகலாம். உன் தாய் தந்தையரின்பேரில் ஒரு வீடு வாங்கிக்கொடுத்து விடுகிறேன். நம்முடன் கூடவே இருக்கட்டும். அப்படி இருக்கச் சரிப்படவில்லையென்றால் மாதம் 20 ரூபாய் கொடுத்து ஆதரிக்கிறேன். உன் தம்பிக்கு வேலை செய்துவைத்துக் கல்யாணத்தையும் பண்ணுகிற வரையில் என் பொருப்பு. சரிதானா? என் வார்த்தையில் நம்பிக்கை இல்லையெனில் எழுதித் தருகிறேன்" என்றான்.

நித்யாவின் துணிச்சலும் பேச்சும் அவளைப் பெற்றோருக்கே பரம ஆச்சரியமாயிருந்தன. நித்யா சற்றும் தியங்காமல், "உலகம் பலவிதம். தாயும் மகனும் எனினும் வாயும் வயிறும் வேறல்லவா? அதுபோல் சகலமும் கண்டிப்பான முறையிலிருப்பதுதான் மிக்க நல்லது. தாங்கள் இப்போது சொல்லியதை யப்படியே எழுதிக் கொடுத்துவிடுவதுதான் உசிதம்" என்று சளைக்காமல் கூறினாள்.

திரு:—ஆ! ஆ! நித்யா! இதென்னம்மா கண்டிஷன்? பெரியமனுஷ்யாளிடத்தில் இப்படிப் பேசலாமா! மனவருத்தம் உண்டானால்...

ஹரி:—இல்லை; இல்லை...அப்படிக் கொன்றுமில்லை. அவள் சொல்வது மிகவும் சரியானது. கண்டிப்பாக இருப்பதில் எத்தனையோ அனுகூலம் உண்டு...உன்னிஷ்டப்படியே செய்வோம். பயப்படாதே. சகலமும் உன்னுடையது. நீ எப்படி எப்படி செய்யச் சொன்னாலும் அப்படிக்கெல்லாம் செய்வதற்குச் சித்தமாய் காத்திருக்கிறேன்.

நித்யா:—மெத்த சந்தோஷம். இதோ இப்போதே எழுதிக் கொடுத்துவிடுங்கள். சாஸ்திரியே சாக்ஷிக் கையொப்பம் போட்டு விடுவார்.—என்றாள். ஹரிஹரனும் உடனே நித்யாவின் இஷ்டப்படியே எழுதி அதை அவளிடமே கொடுத்துப் படிக்கச்செய்தான்.

நித்யாவும் அதைப்படித்துவிட்டு சாஸ்திரிகளையும் அவ் வீட்டுக்காரனையும் சாக்ஷிக் கையொப்பமிடச் செய்தாள். இரண்டாயிரம் ரூபாயை அப்பொழுதே செக்காகத் தன் தாயாரின்பேரில் வாங்கிக் கொண்டாள். "வெறும் காகிதத்தில் எழுதியுள்ள இதை சீக்கிரம்

பத்திரத்தில் எழுதி ரிஜிஸ்தர் செய்துத் தரவேண்டும். அதற்கு அடுத்த நாளே கல்யாணத்தையும் முடித்துவிடலாம்'' என்ருள்.

நித்யாவின் ஒவ்வொரு வார்த்தையும், செய்கையும் ஞானம்பாளையும் திருமூர்த்தியையும் ப்ரமிக்கச் செய்ததோடு சிறிது அச்சத்தையும் விளைவித்தது. அவ்வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் ''இதென்ன ஆச்சரியம்! ஒன்றுமே தெரியாதுபோலிருந்த இப்பெண்ணுக்கு இத்தனை சாமர்த்தியம் எப்படி வந்தது? அதோடு தன் தகப்பனைவிட வயதில் பெரியவரை மணப்பதற்கு மனம் எப்படித்தான் துணிந்தது? அடாடா! இச்செய்கையில் எத்தனை தீர்க்கமான விஷயங்கள் நிரம்பிக் கிடக்கின்றன...தன் பெற்ரேரையும் உடன்பிறந்தோரையும் காக்கும் பொருட்டு இப்பெண் தன்னுடைய அருமையான வாழ்க்கையையே த்யாகம் செய்துவிட்டாள் என்ருல் மிகையாகாது. என்ன குணம், எத்தனை அன்பு, இதயத்தில் என்ன வைராக்யமான துணிபு. என்ன தயை, அடாடா! எந்த சிறுமியாவது இப்படிச் செய்யச் சம்மதிப்பாளா! ''கன்யாவரயதே ரூபம்'' என்ற வாக்கைக்கூடவல்லவா பொய்யாக்கிவிட்டாள்!'' என்று வியப்புக்கடலாடினர்கள்.

ஹரிஹரனின் மனம் வேருென்றிலும் நாடவே இல்லை. திடீரென்று வரும் அவசரத்தில் தலையிருக்குக் கலர் கொடுக்கவும், முக க்ஷவரம் செய்துகொள்ளவும் நேரமில்லாதுபோனதால் அந்தப் பெண் இந்த கோலத்தைப் பார்த்து என்ன சொல்லுவாளோ என்று பயந்ததற்கு நேர்விரோதமாகக் காரியம் நடந்துவிட்டதால் ஒருபுறம் சந்தோஷமே உண்டாகியது. அதோடு நித்யாவின் மோகனவடிவம் அவனை அப்படியே லயிக்கச்செய்து அவளது முகத்தைப் பார்த்துக்கொண்டே வெட்கத்தைக்கூட மறந்து உட்கார்ந்திருந்தான்.

சாஸ்:—சரி. இன்று நாளும் நன்ருகவிருப்பதால் இவ்விடத்திலேயே ஒரு சேலையை வாங்கி நிச்சயதார்த்தத்தை முடித்துவிடலாமே! இன்றைய எட்டாவது நாள், அதாவது வைகாசி 10ந் தேதி முகூர்த்தம் நன்ருயிருக்கிறது. அன்று விவாகத்தை முடித்துவிடலாம். என்ன சொல்லுகிறீர்கள்?

ஹரிஹர:—ரொம்ப உத்தமமாய்ப் போய்விட்டது. நித்யா! நீயும் கூட வா. உனக்கு வேண்டிய புடவையை நீயே பொருக்கிக் கொள்ளலாம்—என்று வலுவில் தானே அழைத்தான்.

நித்யா அதற்கும் தியங்கவில்லை. தன் தாயாரையும் கூட அழைத்துக்கொண்டு கிளம்பினள். நித்யாவைத் தன்னுடன் காரில் ஏற்றிக்கொண்டு தானே ட்ரைவ் செய்யவும் தொடங்கினன். அவ்

வூரில் ப்ரபலமான ஜவுளிக்கடைக்குச் சென்றார்கள். நித்யா முதலில் அவ்வூரிலுள்ள அம்மனுக்கு ஒரு புடவையும், பிறகு தன் தாய் தந்தை, சகோதரன் ஆகியவர்களுக்கு சேலை வேஷ்டிகளும் அதன் பின் தனக்கொன்றும் எடுத்துக்கொண்டு ஹரிஹரன் முகத்தைப் பார்த்தாள்.

அந்தப் பார்வைக்கு முன்பு 'இத்தனை ஜவுளியா!' என்று ஒரு க்ஷணநேரம் நினைத்துப் பெருமூச்சுவிட்டான்; அடுத்த நிமிடமே நித்யா பார்த்த பார்வையானது அவனுடைய பெருமூச்சையெல்லாம் பறக்கவடித்துவிட்டது. யார் யாருக்கு எடுத்திருக்கிறாய் என்று கேட்பதற்குப் பதிலாக "இந்த கலர்கள்தான் உனக்குப் பிடித்ததா! இன்னும் வேறு ஏதேனும்பார்க்கிறாயா? என்றுநைஸாகக்கேட்டான்.

நித்யா:—(நகைத்துக்கொண்டே) இவைகள் எல்லாம் எனக்கல்ல. இதோ இது இவ்வூரிலுள்ள அம்பிகைக்கு இவை என் முன்னறி தெய்வங்களாகிய பெற்றோர்களுக்கு. இது என் சகோதரனுக்கு இது ஒன்றுதான் எனக்கு.

இதைக்கேட்டதும் ஹரிஹரனுக்குப் பெரும் வியப்பாகிவிட்டது. 'அம்பிகைக்கா! எந்த அம்பிகைக்கு?' என்றான்.

நித்:—இதுகூடக் கூறவேண்டுமா! கோயிலில் ஆனந்தகரமாய், மங்களவடிவமாய் எழுந்தருளியிருக்கும்சாக்ஷாத் ஜகன்மாதாவாகிய அம்பிகைக்குத்தான் எடுத்து வைத்திருக்கிறேன்.

ஹரி:—அடாடா! நீ இத்தனை புத்திசாலியாயிருந்தும் இது தெரியவில்லையா! வரவர கோயில்களில் நடக்கும் அக்ரமங்கள் உனக்குத் தெரியாதா! அம்மனுக்கோ, ஸ்வாமிக்கோ ஸமர்ப்பிக்கும் உடைகள் ஏதோ சில தினங்கள்தான் கோயிலில் இருக்கும். பிறகு பீரோவே காலியாகிவிடும். உடைகள்போன இடந்தெரியாது போய் விடும். எந்த சிப்பந்தியின் திருமேனியில் அலங்காரமாகவிருக்குமோ, அன்றி சிப்பந்தியைச் சேர்ந்த ஆப்தர்களின் தேகத்தில் வீற்றிருக்குமோ! தெரியாது. இதற்காக...

என்று கூறி முடிப்பதற்குள், நித்யா கலகலவென்று ஒரு சிரிப்புச் சிரித்தாள். இந்த சிரிப்பு எல்லோரையும் ஒரு மாதிரி ப்ரமிக்கச்செய்தது. "உம் எப்போதும் மனித சுபாவத்திற்கே குற்றங் கண்டு பிடிப்பதில் வெகு ப்ரியம். அக்கரை. அதிலே ஒரு நாட்டமும் கூட உண்டு. அத்தனை ச்ரத்தையையும் தம் தம் வாழ்க்கையில் சிறிதாவது காட்டி சிந்தித்துப்பார்த்தால் நிரம்பவும் உபயோகமாக விருக்கும். தாம் தாம் செய்யும் குற்றங்களில் ஒரு சிறிதாவது

உணரலாம். ஒவ்வொருவருடைய வீடுகளிலும் நடக்கும் அக்ரமங்கள் கண்ணுக்குத் தெரியாது. கோயில்களில் நடக்கும் விஷயத்தைப் பற்றிப் பேசுவதில் அதிக ஆசைதான். நாம் செய்வதை நல்லதாக நினைத்துச் செய்தால் பிறகு அதன் பலாபலனை பகவான் கொடுக்கிறான். இதைப்பற்றி நாமேன் கவலைப்படவேண்டும்?'' என்றாள்.

இதைக் கேட்ட ஹரிஹரனின் முகம் ஒரு மாதிரியாகச் சுருங்கியது. வித்யாசமாகப் பதில் பேசவும் முடியாது தியங்கினான். நித்யாவின் வார்த்தையைச் சிலர் வெகுவாய் ஆமோதித்தார்கள். ஞானம்பாளுக்குமட்டும் "இப்படி விளையாட்டுப்புத்தித்தனமாகப் பேசுகிறாளே! அந்த மனிதனுக்குக் கோபம் வந்துவிடப்போகிறதே!'' என்று பயம் உண்டாகியது. ஆனால் நித்யா எதையும் லக்ஷ்யம் செய்யவில்லை.

ஹரிஹரன் நித்யாவின் அழகில் ஐக்யமாகி அடிமைபோலானானேயன்றி அவள் படபடத்துப் பேசும் பேச்சில் சற்று யோசனையே உண்டாகியது. "இப்படியே எல்லா அம்சங்களிலும் இருந்தால் எப்படி வாழ முடியும்?'' என்று ஒருயோசனை குபீரென்று தோன்றியது. ஆனால் அடுத்த நிமிடமே, "உம். நாம் ஆண் சிங்கக் குட்டி. இது வெறும் பெண்மான்தானே. சரியானபடி வழிக்குக் கொண்டுவரலாம்.'' என்ற சுயநல தைரியமும் கூடவே பிறந்துவிட்டதால் மெல்ல சமாளித்துக் கொண்டு 'சரி...உன்னிஷ்டப்படியே எடுத்ததை முடித்துக்கொண்டு கிளம்பு' என்றான்.

பல நாட்கள் பழகிய மனிதர்கள்போல் பேச்சும், நடத்தையும் இருப்பதைக் கண்டு ஞானத்திற்கும் வியப்பாகவே இருந்தது. நித்யா விலைகளைப் பேசி முடிக்கும்படி ஹரிஹரனுக்கே உத்திரவிட்டாள். ஒரு வியாபாரத்தை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார்கள். சாஸ்திரிகள் ஜவுளிகளை திருமூர்த்திக்குத் தடவிப் பார்க்கும்படிக்குக் காட்டிச் சொன்னார்.

திரு:—அம்மா! அம்பிகைக்கு வாங்கவேண்டியது கடமைதான் எங்களுக்கெல்லாம் எதற்கம்மா! அவருக்குச் செலவுதானே!....

நித்:—அப்பா! இத்தனை பெரிய மனிதருடைய கல்யாணத்தில் அவருடைய மாமியாரும், மாமனாரும், மைத்துனரும், கந்த உடையுடன், நின்று 'நீங்கள் கந்தாடைக் குலத்தினர்' என்பதை நிரூபித்துக் காட்டுவதுபோலிருந்தால் அது அவருக்கு அழகாகுமா! அவருடைய கௌரவத்தைக் காப்பதற்காக நான் அவருடைய சம்மதத்தின் பேரில் எடுத்தேன். அவருக்கு இது பிடிக்கவில்லை யென்றால் இப்

போதே திருப்பிவிடுகிறேன்" என்று குயில்போல் கூறினுள்.

ஹரி:—சே சே!...இதென்ன வித்தியாசம் பாராட்டிப் பேசுகிறீர்கள்? உங்களுக்கில்லாத மரியாதையா! அப்படிக்கொன்றும் பேதமாக நினைக்கவேண்டாம்...சரி...மேலே நடக்கவேண்டியதை கவனிக்கலாமே...

அம்மா ஞானம்! இங்கு கொஞ்சம் தெளித்துக் கோலம் போட்டு ரெண்டு தட்டுகள் கொண்டுவா! கொஞ்சம் சோபனுக்ஷதை பண்ணு. குத்துவிளக்கு ஏற்று...மணைகள் போடு, அக்கம் பக்கம் உள்ளவர்களைத் தாம்பூலத்திற்கு அழைத்துவிட்டு வா"... என்று சாஸ்திரிகள் அடுக்கிக்கொண்டே போனுர்.

நித்:—சாஸ்திரிகளே! இங்கு அதெல்லாம் ஒன்றும்வேண்டாம். முதலில் கோயிலுக்குப்போய் அம்பாளுக்குச் சேலையைச் சாத்தி அர்ச்சனை செய்தபின் அவ்விடத்திலேயே தாம்பூலத்தை மாற்றிக் கொள்ளுவோம். ஜகதீச்வரனுக்கும், ஜகதம்பிகைக்கும் முன்பு சன்னிதானத்தில் செய்வதுதான் எனக்கு த்ருப்தி" என்றுள்.

திருமூர்த்தியும் ஞானமும் அதையே ஆமோதித்ததால் தாம்பூல புஷ்ப சகிதம் எல்லோரும் கோயிலுக்குச் சென்றுர்கள். அம்பாளுக்குச் சேலையைச் சமர்ப்பித்து அர்ச்சனை முதலியன செய்து எல்லோரும் ஆனந்தமாக தரிசனம் செய்தார்கள். நித்யாவின் இதயத்தில் பொங்கிஎழும் ஆனந்தவெள்ளத்தின் எல்லையைக் கூறமுடியாது.

"தாயே! ஜகத்ஜனனீ! தயாநிதீ! என் மனப்பூர்வமான வேண்டுகோளை நீ உன் கடமைப்படிக்கு நிறைவேற்றிவிட்டாய். உனக்கு இந்த அற்பப் புடவையைச் சாத்திவிட்டதனுல் உனக்கு நான் ப்ரதி செய்தவள் ஆகமாட்டேன். உன் மேனியில் மங்களகரமாய்த் துலங்கும் இந்நூலைப்போல் என்னுடைய நூலுடன் (அதாவது திருமங்கல்யச் சரட்டுடன்) என்னை நீ உன் பொன்னடியில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதை ஞாபகமூட்டவே இச்சேலையை உனக்கு அடையாளமாகக் கூறுகிறேன். அந்த பாக்யத்தை எனக்களித்து என் பிறவியை ஸார்த்தகமுறச் செய்யவேண்டும். தாயே!

நான் உன் சன்னிதானத்தில் செய்த சபதத்தின்படியே என் பெற்றேரின் போஷணைக்காகவும் என் சகோதரனின் எதிர்கால வாழ்க்கையின் வளர்ச்சிக்காகவும் நான் என்னை ஒரு கிழவனுக்கு அர்ப்பணம்செய்துவிட்டேன். எல்லாம் உன்னுடைய லீலாவினேதம் எல்லாம் உன்னுடைய மாயை. என் பெற்றேர்களுக்குக் கடைசி வரையில் ஒருவித கஷ்டமுமின்றி காலக்ஷேபத்தை நடத்த அருள்

பாலித்தால் போதும். என்னைப்பற்றி நான் ஒரு சிறிதும் கவலையே படவில்லை. என்னால் தாய் வர்க்கத்திற்கும், கணவன் வீட்டாருக்கும் துன்பமில்லாது சந்தோஷமாயிருக்கும்படி அனுக்ரகம் செய்தால் அதுவே என் பிறவியின் ஸார்த்தகமாகும்' என்று அவள் கண்ணீர் பெருக மனமுருகி ப்ரார்த்தனை செய்யும்போது சன்னிதியில் எரிந்துகொண்டிருந்த தீபம் கொழுந்துவிட்டு எரிந்து ஜகஜ்ஜோதியாக ப்ரகாசித்ததோடு அதிலிருந்து பொறியும் விழுந்ததுகண்டு, நித்யாவின் உள்ளம் பூரித்தது. அவளால் அறியமுடியாத ஒரு இன்ப எழுச்சி மனத்தில் கொந்தளித்தது.

அடுத்த நிமிடமே "போகலாமா?" என்று ஹரிஹரன் கூறிய தொனியைக் கேட்டபிறகுதான் தன்னைத்தான் உணர்ந்தாள். "நேரமாகிவிட்டதா! இதோ போவோம்" என்று கூறி அம்மனை வணங்கிவிட்டுக் கண்ணைத் துடைத்துக்கொண்டு மற்ற ஸன்னிதிகளையும் சேவித்துவிட்டுப் பின், மகாமண்டபத்தில் வந்து சேர்ந்தார்கள்.

யாரோ சேவார்த்திகள் ஸ்வாமி தரிசனத்திற்கு வந்திருப்பதாக எல்லோரும் எண்ணினார்கள். ஹரிஹரனும், நித்யாவும் மண்டபத்தில் ஒரு பாயின் மீது உட்காருவதைப் பார்த்ததும் ஜனங்களின் ஆச்சரியத்திற்கும் திகைப்பிற்கும் எல்லையே இல்லை. சாஸ்திரிகள் சேலை, தாம்பூலம் முதலிய தட்டுக்களை எடுத்து பஞ்சாங்கத்தை நன்றாகப்பாடிப் பின் "நிச்சயதார்த்த சுபமுகூர்த்தத்தில்மாமனாருடைய ஆசீர்வாதம்." என்று கூறியதும் கோயிலிலுள்ள வேலைக்காரர்கள் முதல் மூக்கின்மேல் விரலைவைத்து வியந்தார்கள்.

"தேவமாதோ! சாக்ஷாத் ரதிதேவியோ" என்று வியப்புறும் வண்ணம் நித்யா புதிய சேலையைக் கட்டிக்கொண்டு வந்து நின்றாள். ஹரிஹரனுக்குமட்டும் தன்னையறியாமேலேயே ஒரு மாதிரியான வெட்கம் மனத்தில் தோன்றி வதைத்தது. என்ன செய்வது? சாஸ்திரிகளை சீக்கிரம் முடிக்கும்படிக்கு அவசரப்படுத்தினர். 5 நிமிஷத்தில் வேலை முடிந்து விட்டது. அவ்விடத்திலேயே பஞ்சாங்கத்தை வைத்துக்கொண்டு அடுத்த வாரத்திலேயே முகூர்த்தத்தையும் பார்த்து முடித்து விட்டார்.

பெண்ணின் முகத்தில் கொஞ்சங்கூட வருத்தமே காணவில்லையே! கிழவனைக் கட்டிக்கொள்ளும் பெண்ணாகவே தோன்றாமல் சிரித்த முகத்துடன் இருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமல்லவா?" என்று ஜனங்கள் பேசிக்கொள்ளவாரம்பித்தார்கள்.

"கிழவனும் இந்த தருணம் தட்டினால் எங்கே இந்த ரதி

தேவியை அடைவது தட்டிப்போகுமோ?'' என்று பயப்பட்டு உடனே ஐஸா பைஸாவாக வேலையை நடத்துகிறான். பெண்ணும் "சமயம் கைவிட்டால் இந்த வரன் எங்கே போய்விடுமோ!'' என்று ஜல்தியாக முடிக்கிறாள். இதில் ஏதோ முன் ஏற்பாடும் உள்மர்மமும் இருக்கவேண்டும். பெண்ணின் தகப்பன் குருடன்; அவனுக்கு இவன் கடன் கொடுத்து அதை அடைக்க வழியின்றி பெண்ணைக் கொடுத்துக் கடனைத் தீர்ப்பதுபோல் தோன்றுகிறது.'' என்று ஒருவர் தனது அபாரமான அபிப்ராயத்தைக் கொடுத்தார்.

''ஐயோபாவம்!...பெண் கிளிபோலிருக்கிறது. என்ன இருந்தாலும் அவனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் 30 வயதுக்குமேல் வித்தியாசமிருக்கும்போல் தோன்றுகிறது. இதென்ன எழவு கல்யாணம்!'' என்று சிலர் அனுதாபத்துடன் பேசினார்கள்.

யார் எதைப் பேசினால் என்ன! எப்படி அனுதாபப்பட்டால் என்ன! நிச்சயதார்த்த கல்யாணம் நடந்தேறிவிட்டது. எல்லோரும் வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தார்கள். அடுத்தமணிக்கே மணமகனின் காரும் கனவேகமாகப் பறந்துசென்றது.

5

"நித்யா! நான் உன்னுடைய ஆப்த சினேகிதையானதால் கேட்கிறேன். நீ கோபிக்காதே. எனக்குக்கூடச் சொல்லாமல் இத்தகைய காரியத்தை எப்படி முடித்துவிட்டாய்? உண்மையில் சொல்லு. பொய் சொல்லாதே. சங்கோஜப்படாதே. அந்தக் கிழநாற்றத்தை நீ மனப்பூர்வமாக விரும்பியா ஒப்புக்கொண்டாய்? உன்மனது துணிந்ததா! என்னிடம் சொல்லு. மறைக்காதே. ஏன் கண்ணீர் முட்டுகிறது? நித்யா! நித்யா! இதோபாரு. உனக்கேற்ற வாலிபன் உனக்குக் கிடைக்கவில்லையா?'' என்று வாஞ்சையோடு கற்பகம் கேட்டாள்.

நித்யா:—கற்பகம்! நீ எல்லாந் தெரிந்திருந்தும் என்னை இப்படிக் கேட்பது எனக்கு துக்கமாகவே இருக்கிறது. என்னிலைமையை நீ அறிந்துள்ளதைவிட என் வாயால் சொல்லிக்கேட்பது உனக்கு ப்ரியமா! என் பிதாவின் ஏழ்மையும் அந்தகமும் என் கண்முன்பு ப்ரத்யக்ஷமாகத் தெரியும்போது வாலிபனை மணந்து சந்தோஷமாக

விருக்க எப்படி முடியும். என் சந்தோஷந்தானு எனக்குப் பெரிது?

கற்ப:—நித்யா! இந்த வேதாந்தமெல்லாம் எதற்கு? ஒருவாலிபனை சமையல்காரன், கூலிவேலைக்காரன்கூட உனக்கு அகப்பட மாட்டானே! உங்கப்பா அம்மாவே முனையவில்லை.

நித்:—(ஆத்திரத்துடன்) கற்பகம்! இம்மாதிரி அனுவச்யமாய்ப் பேசாதே. என் பெற்றோர்களுக்குள்ள தத்தளிப்பை நீ அறிய மாட்டாய். யௌவனத்திற்குமட்டும் ஆசைப்பட்டு இரண்டு இடத்திலும் திண்டாடுவதைச் சுகமென்று நினைக்கிருயா! எங்கப்பாவுக்கு அந்தகமாவது இல்லாதிருந்தால் அவர் கூலிவேலை செய்தாவது பிழைக்கட்டும் என்று நான் என் சுயநலத்தைக் கருதி வாலிபனை மணக்கலாம். இரண்டு கண்களும் இல்லாத என் தகப்பனுர் பரிதவிக்க, நான் ஒரு ஏழைவாலிபனை மணந்துவிட்டால் அவனுல் எனக்குச் சோறுகிடைப்பதே அரிது. 'சீரில்லை. சிறப்பில்லை' என்று ஏதாவது சாக்குவைத்து என்னையும்தள்ளிவிட்டால் என்னசெய்வது? இவர்களையும் ஆதரிக்காமல் நானும் வந்து சேர்ந்துவிட்டால் கேட்க வேண்டுமா! எனக்கு அது உசிதமாகத் தோன்றவில்லை.

கற்பகம்! நான் என்னிதய பூர்வமாய்ச் சொல்லுகிறேன். எனக்கு என் ஒருத்தியின் இன்பமான வாழ்க்கையில் த்ருப்தியே இல்லை. என்னைப் பெற்ற முன்னறி தெய்வங்களாகிய பெற்றோர்களுக்கு ஒரு வழி செய்து வைத்து, என் தம்பியைச் சற்று கை தூக்கிவிட்டு அவனுல் அவர்களுக்கோர் ஆதரவு காட்டிவிட்டால் அதுவே எனக்குப் போதும். அதுதான் என்னுடைய லக்ஷியம். அம்மாதிரி எவன் செய்கிருனே அவனையே நான் மணப்பது என்று சங்கல்பமும் செய்துகொண்டேன்.

என் பெற்றோர்களாக இம்மாதிரி கிழவனுக்குக் கொடுக்கத் துணிந்திருந்தால் நீ சொல்கிறபடி குற்றந்தான். நானே என் மனப்பூர்வமாய் மணப்பதற்கு முன்வந்திருக்கையில் அவர்கள் மீது ஏன் பழி கூறுகிருய்?

கற்ப:—நித்யா! என்னதான் நீயே மனத்தை திடப்படுத்திக் கொண்டு சமாதானம் சொன்னுலும் என் மனது கேட்கவே இல்லை. கிழவனுக்கு வாழ்க்கைப்பட பெண்களே துணிவது அதிசயத்திலும் அதிசயம். உலகத்தில் ஆயிரத்துக்கு ஒன்று இம்மாதிரி அகப்படுவது அரிது. கிழவனைத்தான் மணக்கிருயே குழந்தைகள் தொல்லையாவது இல்லாதவனுய்...

நித்:—அம்மா! என் தாயே! போதும்; போதும். நிறுத்து. இந்த

உபதேசம் எனக்கு வேண்டாம். நிறைய குழந்தைகள் இருக்கும் கிழவன் அகப்படுவானா என்றுதான் நான் தவம் செய்தேன். குழந்தைகளின் பாதுகாப்பில் என் காலம் ஆனந்தமாகக் கழியும். கிழவனின் உபத்திரவம் அதிகமாயிராது. இரவு முற்றும் குழந்தைகள் என் பக்கலில் ஆனந்தமாகப் படுத்திருக்கும். அதுவே எனக்குப்போதும்.

கற்ப:—அடி பைத்தியமே! உன் மூளை இப்படியா வேலை செய்கிறது?...உம். கிழவனுக்குக் கல்யாணத்திற்கு ஒரு பிள்ளைகூட இருக்கிறானாமே! அவனுக்காவது நீ...

நித்:—கற்பகம்! ஏதேது வெகு தெளிவுடன் பேசுகிறாய்? பெரிய பணக்காரன் வீட்டுப் பிள்ளைக்கு இந்த அந்தகனின் அஷ்டதரித்திரப் பெண்தான் வேண்டும். கற்பகம்!...என்னிடம் உள்ள ப்ரியத்தினால் நீ ஏதேதோ பேசுகிறாய். எனக்கோ அவைகள் பிடிக்கவில்லை. யார் யார் தலைவிதி எப்படி இருக்கிறதோ, அப்படித்தான் யாவும் நடக்கும். வீணாக வருந்தியும், அதே ஏக்கமாகவிருப்பதாலும் என்ன லாபம்? அவரென்னவோ பார்ப்பதற்கு கம்பீரமாயும், சிகப்பாயும், அழகாயும் இருக்கிறார். என்னை முழு மனத்துடன் விரும்புகிறார். என் பெற்றோரைக் காப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். அவ்வளவுதான் எனக்குப் போதும். எனது சொந்த விஷயத்தில் நான் எதையும் த்ருணமாக மதித்துவிட்டேன்.

கற்ப:—நீ சொல்வது வாஸ்தவந்தான். இருந்தாலும் சொல்லியதைச் சொல்லியபடிச் செய்வாரா?...நடுவில் ஏதாவது...

நித்:—கற்பகம்! வீண் சனியனை விலைக்கு வாங்க யாராவது துணிவார்களா! நம்பிக்கையின்மீது நடப்போம். மேலே நடத்திச் செல்ல பகவானிருக்கிறான்.

கற்:—கோபிக்காதே. மனிதசரீரம் சாச்வதமில்லை. அவருக்கோ வயதாகிவிட்டது. ஏதாவது ஒரு ஏடாகூடம் நடந்துவிட்டால்...

நித்—ஐயோ, ராம ராமா!...கற்பகம்! உன் பேச்சே எனக்குப் பிடிக்கவில்லை. விதி யார் யாரை எப்படி எப்படி ஆட்ட நினைத்திருக்கிறதோ அப்படி ஆட்டித்தான் தீரும். நீ நினைக்கிறபடி எதுவும் நடக்காது. அதற்கே நான் பகவானை இரவு பகல் வேண்டுகிறேன். அந்த அருளை அவன் புரிந்தே ஆகவேண்டும்.

கற்ப:—என்ன நித்யா! இத்தனை கோபித்துக்கொள்கிறாயே! உனது நன்மையை உத்தேசித்துத்தானே சொல்கிறேன். உன்னுடைய பெற்றோரின்பரிதாபத்திற்காக நீ இந்த சிறந்த த்யாகத்தைச்செய்யத் துணிந்ததானது மிகமிக வியப்பாயிருக்கிறது. உனதுமனத்தில் இந்த துணிபு எப்படித்தான் வந்ததோ! பெற்றோரிடத்தில் எல்லோருக்கும் அன்புஇருக்கவேண்டியது நியாயந்தான். ஆனால் இத்தனைகடினமான பரீக்ஷையை ஏற்றுக்கொண்டதானது உனது இதயத்திலுள்ளதயையைத்தான் காட்டுகிறது. இருந்தாலும் இளம்வாலிபனுடன் இன்பமாய் காலங்கழிக்க உன்மனது விரும்பினால்...காதல் தோன்றினால்...

நித்:—(சிறிது கோபத்துடன்.) கற்பகம்! நீ எனக்கு இதமாகப் பேசவந்தவளாகத் தெரியவில்லை. காதலும் கத்தரிக்காயும் பெரிய பாட்டியைப்போல் பேசவந்துவிட்டாயே! இதெல்லாம் சந்துஷ்டியும் மனத்தில் தெம்பும் இருப்பவருக்கல்லவா? அந்த எண்ணமே என்மனத்தில் உதிக்காத வரனை நான் பகவானிடம் வேண்டுகிறேன். என் வேண்டுகோளை அவன் நிராகரிக்கமாட்டான்...

கற்ப:—அப்படியானுல் உனக்கு இளமையின் இன்பம், சந்தோஷம், இயற்கையின் உணர்ச்சி...

நித்:—ஐயையோ! இந்த பேச்செல்லாம் என்னிடம் வேண்டாம். கற்பகம்!...இளமையாவது, இன்பமாவது எதுவும் என்னிடம் இல்லை என்று நினைக்கிருயா! என் பெற்றோர்களை ஆதரிப்பது ஒரு இன்பம். என் சகோதரனைக் கைதூக்கிவிடுவது ஒரு சந்தோஷம். என் மூத்தவளின் குழந்தைகளுக்கு அன்புடன் உழைப்பது ஒரு ஆனந்தம். இல்லை என்று ஏற்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் அள்ளிக் கொடுப்பதில் ஒரு திருப்தி, பரம உத்ஸாகம். பகவானை இடைவிடாது பூஜைசெய்து மனத்தினுலும் வாக்கினுலும் சரீரத்தினுலும் பரிசுத்தமாக அவனை த்யானிப்பதில் எல்லையில்லாப் பேரின்பம். கானமிருதத்தினுல் அவனைத் துதிப்பதில் ஒரு களிப்பு. ஆனந்தகரமான உலகத்தையும், இயற்கை தேவியின் திருவிளையாடல் காக்ஷிகளையும் கண்டு களிப்பதில் ஒரு மகிழ்ச்சி. என் பர்த்தாவின் நிழலில் அவருக்குச் சேவை செய்துகொண்டு வாழ்வதில் ஒரு தனித்த சுவை...ஒரு ஆத்மாவின் திருப்திக்கு இவைகள் போதாவா! அந்த கனின் மகளுக்கு இத்தகைய பேரின்பங்கள் கிடைத்தது பாக்யவசமல்லவா!...நானுகத் தேடி வரித்த பிறகு எனக்கு மனக் குறைவு ஏது?—என்று பெரிய ப்ரஸங்கம்போல் கூறியதைக்கேட்ட கற்பகத்திற்கு பதில் சொல்லமுடியாமல் திக்கு முக்காடிவிட்டது.

இந்த சம்பாஷணைகளை மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த ஞானத்திற்கும் திருமூர்த்திக்கும் தாங்க முடியாத மன எழுச்சியும், நித்யாவின் ஒப்பற்ற தீர்க்காலோசனையும் அன்பும் கண்டு அளப்பரிய வியப்பும் ஒன்றுகூடி அவர்களை நிலைகலங்கச் செய்துவிட்டன. கண்ணீர் மளமளவென்று ஆருய்ப் பெருகியது. தாம் இருப்பதை அவர்களறிந்தால் சம்பாஷணை நின்றுவிடும் என்று தோன்றியதால் மௌனம் சாதித்தார்கள்.

கற்:—நித்யா! நீயும் நானும் சிறு குழந்தைப் பருவம் முதல் ஒன்ருக விளையாடி ஒன்ருகப் பழகிய தோஷத்தினுல் என் மனது தத்தளிக்கின்றது. இன்றுள்ள இவ்வைராக்கியம் என்றும் நிலைத்திருக்கவேண்டும். பகவான் உன்னுடைய கருணைக்கும், தயைக்கும் தியாகத்திற்கும் சித்தமிரங்கி உன்னை என்றென்றும் காக்கவேண்டும். இதைவிட நான் வேறு என்ன சொல்வதற்கு இருக்கிறது. நீ சகலமங்களத்துடனும் நன்ருக இருப்பதைக் கண்ணுறக் கண்

டால் அதுவே எனக்கு த்ருப்தி. நீ என்னவோ பரம சந்தோஷமாயும், தெம்பாயும் இருக்கிறாய். என்றால் உன்னைப் பார்த்துச் சகிக்கவே முடியவில்லை. அன்று நீ கோவிலில் அந்த கிழவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தபோது உண்மையில் கோவிலினுள்ளவர்களின் உள்ளம் பதறியது....

இந்த வார்த்தையை நித்யாவினால் சகிக்க முடியவில்லை. அவள் காதுகளைப் பொத்திக்கொண்டு "கற்பகம்!...நான் போகிறேன்" என்று கூறிக்கொண்டே எழுந்து ஓடிவிட்டாள். கற்பகமும் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. தன் வீட்டிற்குச் சென்றாள்.

திரு:—ஞானம்! நித்யா எங்கே போனாள்?

ஞா:—கொல்லைப்புறம் சென்றாள். ஏன், எதற்கு?

திரு:—கற்பகம் சின்ன பெண்ணாயிருப்பினும் எத்தனை விவகாரங்களுடன் பெரிய பெரிய வார்த்தைகளைப் பேசினாள் பார்த்தாயா!...நித்யாவின் வைராக்யமும் தீவிரமான எண்ணமும் ஒரு சிறிதும் அசையவே இல்லையே...நாம் இனி என்ன செய்வது? நாளையதினம் கல்யாணத்திற்குப் புறப்படவேண்டுமே! வேண்டாமென்று நிறுத்திவிடுவோமா!

ஞானு:—எனக்கும் ஒன்றும் தோன்றாது மனது தாமரையிலை நீர்த்துளிபோல் தத்தளிக்கின்றது.என்ன செய்யலாம்?—என்றதைக் கேட்டுக்கொண்டே வந்த நித்யா, "அம்மா! இன்னுமா உங்கள் மனது தெளியவில்லை. நான் வெகு சந்தோஷத்துடனிருக்கையில் நீங்கள் ஏனம்மா கவலைப்படவேண்டும்?

ஞானு:—நித்யா! நீ என்னமோ குசாலாகத்தான் பேசிக்கொண்டே போகிறாய். என் நெஞ்சமென்னவோ திக்குதிக்கு என்று அடித்துக் கொள்கிறது. சங்கடம் செய்கின்றது. பழய கால விஷயங்கள் எல்லாம் நினைவில் வந்து வாட்டுகின்றன. நீ இன்னும் சிறியவளாயிருக்கையில் "சாருலோசன" என்கிற கதையைப் படித்துவிட்டு கண்ணீரைக் கக்கினதும், 'அத்தகைய பெற்றோர்களை உயிருடனேயே கொலை செய்துவிடலாம்" என்று ஜெயமணியின் தாய் தந்தையர்களைப்பற்றி நீ திட்டியதும் என் மனத்தில் இப்போது தான்போல் ஒலிக்கின்றன. அம்மாதிரி கூறிய நீயா!—என்று முடிப்பதற்குள் நித்யா ஆவேசத்துடன் பேசத் தொடங்கி, "அம்மா! நான் அப்போது சொன்னது வாஸ்தவம்! இப்போதும் சொல்கிறேன். ஜெயமணியின் நிலைமையும் என்னுடைய நிலைமையும் ஒன்றல்ல. அவளுடைய இதயத்தை ஏற்கெனவே ஒரு யுவன் கொள்ளை கொண்டுவிட்டான். அவளுடைய பெற்றோர்கள் அவளைக் கட்டாய மணம் செய்து ஒன்றுக்கு மூன்று ஆத்மாக்களைப் பாழடித்தார்கள். என் விஷயத்தில் நானே சர்வாதிகாரி. நானே தீர்மானித்து இதைச்செய்யும்போது இதில் குற்றமோ, குறையோ ஏதம்மா! வீணாகக் கவலைப்பட்டு வாடாதீர்கள்" என்று ஆணி அறைவதுபோல் கூறினாள்.

6

எத்தனை தரம் கூறினும் அவள் பிடிவாதத்தை விடவே இல்லை. வைராக்யமென்றால் சரியான வைராக்யத்தை மனத்தில் புதைத்துக் கொண்டாள். கல்யாணத்திற்குப் புறப்படவேண்டிய தினமும் வந்தது. ஹரிஹரன் இவர்களை ஜாக்ரதையாக அழைத்து வரும்படித் தன் குமாஸ்தாவை அனுப்பினான். குமாஸ்தாவும் வந்து சேர்ந்தான்.

கல்யாணம் ஹரிஹரனுடைய பழய கிராமத்துக் கோயிலில் நடத்த ஏற்பாடு செய்திருந்ததால் இவர்களை அவன் கிராமத்திற்கு அழைத்துச் சென்றான். இவர்களுக்கென்று ஒரு தனி விடுதியும் தயார் செய்திருந்தான். கிராமமாகையால் அவ்வூர் ஜனங்கள் வெகு ஆச்சரியத்துடன் இந்த கல்யாணத்தை எதிர்பார்த்தார்கள்.

கல்யாணப் பெண்ணின் வரவையே வெகு ஆவலுடன் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். விடியற் காலம் இரட்டை மாட்டு வண்டியில் நித்யா முதலியவர்கள் வந்திறங்கினார்கள். குப்பம்மாள் தங்கள் வீட்டு வாசலிலேயே நின்று மருமகளாக வரப்போகும் பெண்ணை வெகு ஆவலுடன் பார்த்துக்கொண்டே நின்றாள்.

''மகாலக்ஷ்மியின் அம்சமோ, அன்றி அந்த லக்ஷ்மியின் மருமகளாகிய ரதியோ!' என்று குப்பம்மாள் தன்னையே மறந்து தம்பித்து விட்டாள். அவளுடைய சந்தோஷத்தை அளவிட்டுக் கூறமுடியாது. ''பெண் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்!'' என்று அவள் மனது வியப்புற்றது. குடுகுடென்று உள்ளே ஓடி ''ஸுதா! ஸுதா! எழுந்திரு. கல்யாணப் பெண் வந்துவிட்டாள். எத்தனை அழகாயிருக்கிறாள் தெரியுமா! ரதி என்றால் ரதிதான்''என்று தன்னுள்ளத்திலிருந்து பொங்கிவரும் ஆவல்பூராவும் காட்டி எழுப்பினாள்.

ஸுதா ஆவலுடன் ''வந்துட்டாளா பாட்டி!'' எங்கம்மா மாதிரி இருக்காளா!'' என்று கேட்டவாறு எழுந்து ஓடிவந்தாள். இதற்குள் குப்பம்மாளின் சாக்ஷாத் தங்கையின் மகள் நித்யாவுக்கு ஆலத்தி சுத்தி உள்ளே அழைத்தாள். நித்யா தன் தாயாருடன் உள்ளே சென்றாள். தாமோதரன் தகப்பனாரைக் கையைப்பிடித்து அழைத்துவந்து திண்ணைமீது உட்காரவைத்தான்.

அக்கம்பக்கம் உள்ள ஜனங்கள் ''அடாடா! என்ன அழகு! என்ன அழகு! ஹரிஹரனுக்கே மகா அதிர்ஷ்டம். மனைவியைப் பார்த்தாலும் பசியாறும். உம். அழகைக் கொடுத்த கடவுள் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கவில்லை. இத்தனை அழகுள்ள பெண் ஒரு பணக்காரனுக்குப் பிறந்திருந்தால் இப்படி மூன்றாந்தாரமாக வாழ்க்கைப்பட விதியமையுமா! தகப்பன் தரித்திரத்துடன் அந்தகம்; அதனால் இப்படியாயிற்று. இவளாவது அந்த ஹரிஹரனுக்குத் தக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டார்கள்.

குப்பம்மாள் ஸுதாவை அழைத்துக்கொண்டு தாம்பூலத்தட்டு சகிதம் நித்யா இறங்கியுள்ள வீட்டிற்கு வந்தாள். குப்பம்மாளின் சகோதரியின் புதல்வி "இதோ இவள்தான் எங்க பெரியம்மாள்; உங்கள் சம்மந்தியம்மாள்...நித்யா! உன் மாமியார்....இவள்தான் தாயில்லாப்பெண்...ஸுதாமதி"......என்று அறிமுகப்படுத்தினாள்.

நித்யா குப்பம்மாளையும் சம்பகத்தம்மாளையும் சேவித்தாள். ஸுதாவைப் பார்த்ததும் சந்தோஷத்துடன் வெகுநாள் பழகியவள் போல் அவளைத் தானே இழுத்துக்கட்டிக்கொண்டு தலையைக் கோதினாள். ஸுதாவுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. தம் எதிர்த்த வீட்டுக் கல்யாணியின் சிறியதாயாரின் ஞாபகமே வந்ததால் அப்படியே திகைத்து நின்றாள்.

குப்ப:—மகாராஜியாய் நன்றாக இருக்கணும். பகவான் உங்கள் எல்லோருக்கும் தீர்க்காயுளைக் கொடுக்கணும்.—என்று வாழ்த்திப் பின் தட்டைக் கொடுத்தாள்.

ஞா:—உட்காருங்கள். ஏதோ குழந்தையின் பொறுப்பு இனி உங்களுடையது—என்றாள். மேலே பேசமுடியாது ஏதோ ஒருமாதிரியான துக்கம் தொண்டையை அடைத்தது. இதற்குள் குப்பம்மாள்வீட்டு சமையல்காரன் காப்பி, பலகாரம் இரண்டும் தயாராகி விட்டது என்று ஒரு அறிவிப்பை விடுத்தான்.

சம்பகம்மாள் இவர்களை அழைத்துச் சென்று காலைக்கடன்களை நிறைவேற்றச் செய்து ஆகாரமும் செய்வித்தாள். குளித்த பிறகு கோயிலுக்குச் சென்று ஸ்வாமிதரிசனம் செய்தார்கள்.

* * * * *

அந்த கிராமத்தின் முனிசீப்பினுடைய சகோதரியின் மகன் லீவுக்காக மாமா வீட்டிற்கு அன்று காலையில்தான் வந்தான். செல்வத்திலும், படிப்பிலும், அழகிலும், அறிவிலும் சிறந்த மருமான்ஏழையான மாமா வீட்டிற்கு வந்ததால் அவர்களின் பெருமையைக் கூறவேமுடியாது. வீடுகல்யாணவீட்டிற்குமேல் தடபுடல்படுகிறது.

"வாடாப்பா கோபூ! உனக்கு வெண்டக்காய் என்றால் மிகவும் பிடிக்குமேயென்று இட்டிலிக்கே வெண்டக்காய் சாம்பார் வைத்திருக்கிறேன். திரட்டுப்பால் உனக்கு பரம ப்ரீதியாயிற்றே என்று அதையும் கொஞ்சம் செய்துவைத்தேன்" என்று வாஞ்சையுடன் மாமியின் உபசாரம் தடபுடலாக நடந்தது.

கோபு ஒரு சாதாரண மனிதனாகவே அந்த ஏழைகளுக்குத் தோன்றவில்லை. அவன் ஒரு இளவரசன்போலவே தோன்றினான். கோபுவுடன்கூடவே அவன் மாமாவும், மாமாவின் மகனும் கோயிலுக்குச் சென்றார்கள்.

அம்மன் சன்னிதியில் தரிசனம்செய்துவிட்டு கோபு வெளியே வரவும், நித்யா முதலியவர்கள் சன்னிதியில் நுழைபவும் ஒரே நேரமாகவிருந்தது. கோபு வெகு அழகான வாலிபன். வயது 22 கூட

ஆகவில்லை. B. A. B. L. எல்லாம் பாஸ் செய்துவிட்டான். அவனுக்கு எந்த அம்சத்திலும் எவ்விதமான குறைவுமில்லை. அவனுக்கு வரும் பெண்களின் போட்டியோ கணக்கு வழக்கில்லை.

ஆனால் கல்யாணம்மட்டும் செய்துகொள்ள இன்னும் மறுத்துக்கொண்டே வந்தான். அவன் நித்யாவின் பிம்பத்தைப் பார்த்தவுடன் அப்படியே தடைகட்டிய நாகம்போல் தம்பித்து நின்றான். இமைகொட்டும் நேரத்திற்குள் நித்யா சன்னிதிக்குள் சென்றுவிட்டாள். கோபு தன்னை மறந்தவனாய் அவள் உள்ளே செல்வதையும் பார்த்துக்கொண்டே நின்றான். அவனுடைய கண்களுக்குக் காக்ஷிகொடுக்கும் நித்யாவின் ரூபத்திற்கு திடீரென்று அவன் அடிமையானானென்றால் அதை அவனாலேயே நம்பமுடியவில்லை.

"மாமா! கைகுட்டை உள்ளே விழுந்துவிட்டது. எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்றுகூறி உள்ளே சென்றான். அம்பிகையின் சுந்தர வடிவத்தின்மீது கண்களையும் மனத்தையும் நிலைநிறுத்தி அதே த்யானமாக நமஸ்கரித்துத் தோத்திரம்செய்து நிற்கும் நித்யாவின் பிம்பத்தில் கோபு ஐக்யமாகிச் சிறிதுநேரம் நின்றான்.

முகத்தின் வசீகரமும், கண்களின் விசாலமான ஒளியும் சுருண்ட கூந்தலின் வனப்பும், சண்பகமொட்டுப்போன்ற மூக்கின் அழகும் அவன் இதயத்தில் புகுந்துகொண்டன. வைத்த விழியை வாங்கவே முடியாது திகைத்தான். இதற்குள் "கோபு! கோபு!" என்று மாமா கூப்பிடும் குரல் கேட்டது. "பெண் என்றால் இவளல்லவோ பெண்!"...என்று தனக்குள் முணுமுணுத்தான். "கம்பன் ஸீதையையும், காளிதாஸன் சகுந்தலையையும் வர்ணித்திருப்பதன் உண்மை இப்போதுதான் விளங்குகிறது. சாதாரண மானிடப் பெண்ணே அந்த வர்ணனைகளுக்குச் சரியாயிருக்கையில் அவர்களின் அழகு இன்னும் கூறவேண்டுமா!" என்றெல்லாம் நினைக்கவாரம்பித்தான். தன் செய்கையை யாரேனும் பார்த்துவிடப்போகிறார்களே என்கிற அச்சமும் உண்டாகியது. கைகுட்டையை வேண்டுமென்று கீழேபோட்டு மெரித்து அழுக்காக்கி எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். முகத்தில் ஒரு விநாடிக்குள் வேறு விதமான களையும், பார்வையும் தோன்றிவிட்டன. "இதோ பாரு மாமா! யாரோ மெரித்து அழுக்காக்கிவிட்டார்கள்" என்று கூறியவாறு கைகுட்டையைப் பிரித்து உதறிக் காட்டினான்.

மாமா:—போனால் போகிறது. வீட்டிற்குப் போய் சோப்புப் போட்டுக் கசக்கிவிடுகிறேன். அதில் ஏதாவது முடிந்து வைத்திருந்தாயா!

கோபு:—அதொன்றுமில்லை. பாழாகிவிட்டதே!—என்றான்.

"பரவாயில்லை போ" என்று மாமாவுக்கு சமாதானம் சொல்லத் தெரியுமேயன்றி, களங்கமற்ற இவன் மனத்திலும் ஒரு நொடிப் பொழுதில் களங்கம் உண்டாகியதும், கைகுட்டையில் அழுக்கு

படிந்தவிதமும் அவர் எங்ஙனம் அறியக்கூடும்?

இதற்குள் நித்யா சேவித்துவிட்டு வெளியே வந்தாள். பாதாதி கேசபரியந்தம் உள்ள அழகுத்திரள் விநாடிக்கு விநாடி கோபுவின் உள்ளத்தைக் கிளறித் துளாவி அள்ளிப்பருகுகின்றது. அவன் மௌனம் சாதிக்கமுடியாது மாமாவை நோக்கி "மாமா! இது யார் வீட்டுப் பெண்?" என்று கேட்டான்.

மாமா:—உம்...இதொரு கதைடா! நாராயணபுரத்திலிருந்து இன்று காலைதான் வந்திருந்திருக்கிறார்கள். வறுமைப் பேயின் வசம் சிக்கி உழலும் அழகு தேவதை இவள். இவளுடைய தகப்பன் அந்தகன். சோற்றுக்குக்கூட வழி இல்லாத ஏழைகள். இந்த ஊர் ஹரிஹரனை உனக்குத் தெரியுமோன்னா...

கோ:—எனக்குத் தெரியாது. ஏன் அவனுக்கென்ன?...

மாமா:—அவனுக்கென்னவா! அவனுக்குத்தான் கல்யாணம்.

கோ:—ஓகோ! நிச்சயமாகிவிட்டதா! பையன் என்ன செய்கிறான்?

மாமா:—[illegible]! பைத்தியம்போல்கேட்கிறாய்? என்னை விட 10 வயது பெரியவன்; 45 வயதாகிறது.

கோ:—என்ன! என்ன! 45 வயதா!... கிழவனா!....இந்தப் பெண்ணை மணக்கவா!...

மாமா:—ஆமாம். முன் இரண்டுதாரத்திற்கும் சேர்ந்து நான்கு குழந்தைகள் இருக்கிறார்கள். ஹரிஹரன் பெரிய உத்யோகத்தில் இருக்கிறான். ராவ் பகதூர் பட்டம் வந்திருக்கிறது. சம்பளம் 500 ரூபாய். பெரிய மனிதன். மூன்றாந்தாரமாக இந்தப்பெண்ணை நிச்சயம் செய்துகொண்டு வந்திருக்கிறான். நாளை பொழுது விடிந்தால் முகூர்த்தம். இத்தனை நேரத்திற்குள் முடிந்திருக்கும்.

இதற்குமேல் கோபுவால் இந்த அதிர்ச்சியைத் தாங்கவே முடியவில்லை. "என்ன அநியாயம்! 45 வயதுக் கிழவனுக்கு இந்த சுந்தராங்கி மூன்றாம் மனைவியாகப்போகிறாளா! இந்த அக்ரமத்தைக் கேட்பாரில்லையா!" என்று உள்ளுக்குள் குமுறுகிறான். தேகம் முற்றும் இந்த அதிர்ச்சியினால் துடிதுடிக்கின்றது. கண்கள் சிவந்து விட்டன. வாயும் அடைத்ததுபோலாகியது.

அதே சமயம் நித்யா, தாயார் ஸன்னிதியை ப்ரதக்ஷணம் செய்து விட்டு மீண்டும் அதே இடத்தில் வந்து நமஸ்கரித்தெழுந்தாள். இவளைக்கண்டதும் கோபுவின் உணர்ச்சிகள் பின்னும் பன்மடங்கு அதிகரித்துப் பொங்குகின்றன. "இந்த தேவமாதுக்கொப்பான யுவதியா கிழவனுக்கு மாலையிடுவது!" என்று நினைக்கும்போது அவன் சரீரமே பகீரென்று பற்றி எரிவதுபோல் தோன்றி வதைத்தது. அம் மின்னல் கொடியோ, இவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. அன்னமென நடந்து மறைந்துவிட்டாள். வாலிபனின் இதயம் பெரும் இருள் சூழ்ந்ததுபோலாயிற்று. எங்கும் நிச்சப்தம் குடிகொண்டது. வாலிபனின் உள்ளமும் நித்யாவின் பின்னாலேயே சென்றது.

முக்கிய அறிவிப்பு—அவசியம் கவனிக்கவும்

1 இந்தியாவிலும், சிலோனிலும் உள்ள சந்தாநேயர்கள் எல்லோருக்கும் பிரதி மாதமும் நாம் 1உ யன்றே சஞ்சிகையை அனுப்பி விடுவதால், யாருக்காவது சேராவிடில், 10உக்குள் தெரிவித்தால்தான் தபாலில் தவறியதாகக் கருதி மறுபடியும் இனமாக அனுப்பமுடியும். 10உக்குப் பிறகு தெரிவிப்பவர் 2 அணு ஸ்டாம்பு அனுப்பினால்தான் சஞ்சிகை அனுப்பமுடியும்.

2 வெளிநாட்டிலுள்ள சந்தாநேயர்களுக்கு யுத்த காரணத்தால் தபால்கள் தாமதமாவதால் நமது சஞ்சிகை சாதாரணமாக 15உக்குப் பிறகுதான் போய் சேரும். அங்குள்ள நேயர்கள் ஒரு சஞ்சிகை வந்த பிறகும் முன் மாதத்தியது வரவில்லையாயின், உடனே தெரிவித்தால் தான் இனமாக அனுப்பமுடியும்; இல்லாவிடில், சஞ்சிகையின் விலைக்காக ஒரு போஸ்டல் கூபன் வைத்தனுப்பவேண்டும்.

3 விலாசம் மாறுபவர்கள் உடனுக்குடன் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல. இடம் மாறுபவர்கள் தங்களது புது விலாஸத்தை எமக்கு 25உக்குள் தெரிவிக்கவேண்டும். அப்படி தெரிவிக்காது பழைய விலாஸத்திற்கே சஞ்சிகை அனுப்பப்பட்டு தவறிவிடின் நாம் திரும்பவும் அனுப்பமுடியாது. 2 அணு அல்லது 1 போஸ்டல்கூபன் அனுப்பினால்தான் சஞ்சிகை அனுப்பப்படும்.

4 கடிதங்கள் எழுதும்போதும், மணியார்டர், செக் அல்லது போஸ்டல் ஆர்டர் அனுப்பும்போதும் தனிப்பட்டபெயரில் ஆசிரியைக்கோ, பிரசுரகர்த்தாவுக்கோ அனுப்பாமல், நமது காரியாலயத்தின் பெயருக்கே எழுதவும்.

5 எப்போதும் சந்தா நம்பரை குறிப்பிடவும். இல்லாவிடில் தாமத மேற்படும்.

பரிசுகள்: ஜூன் 25ந் தேதிக்குள்

சேரும் சந்தா நேயர்களின் நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 சீட்டுகளெடுத்து அவற்றிற்கு முறையே கீழே குறிப்பிட்டுள்ள தொகையுள்ள நமது புத்தகங்கள் பரிசாகக் கொடுக்கப்படும். முதற் பரிசு ரூ 20/- இரண்டாவது ரூ 15/- மூன்றாவது ரூ 10/- தவிர ரூ 5/-ல் மூன்று பரிசுகள்.

உடனே முந்துங்கள்

கீழ்க்கண்ட நாவல்களில் சில காபிகளில் பேபர் பழுத்திருப்பதால் அவற்றை பாதி விலைக்குக் கொடுக்கிறோம். தபாற் செலவு வேறு. கீழ்க்கண்ட 4 புத்தகங்களையும் ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் ரூ 4/- அனுப்பினால் தபாற் செலவின்றி அனுப்புகிறோம். ஜூலை முடிவு வரைதான் இந்த சலுகை.

	விலை.	குறைந்த விலை.	தபாற் செலவு உள் நாடு.	தபாற் செலவு வெளி நாடு.
வைதேகி	ரூ 2 8 0	ரூ 1 4 0	$4\frac{1}{2}$ அணு	$6\frac{3}{4}$ அணு
பத்மசுந்தரன்	2 8 0	1 4 0	4	6
சாரமதி	1 12 0	0 14 0	$2\frac{3}{4}$	$3\frac{3}{4}$
பரிமள கேசவன்	1 4 0	0 10 0	2	3

"JAGANMOHINI" Vol. XVIII No. 6 Regd. No. M. 2210.

ஜகன்மோகினி 18 ஆவது ஆண்டு 1941

சென்ற ஐந்து இதழ்களில் புகழ்மாலை என்ற நாவல் வெளியாயிற்று. ஷை நாவல் ஒரே வால்யூமாக பைண்டு செய்யப்பட்டு ரூ. 1-4-0 க்கு விற்கப்படுகிறது. சஞ்சிகை ரூபமாக வேண்டுவோர் 10 அணாவுக்கு (5 கூபனுக்கு) பெறலாம். புதிதாகச் சந்தா சேர்வோர் ஜனவரியிலிருந்து பிரதிகள்வேண்டுமா அல்லது ஜூன் முதலாவென்பதைத் தெரிவிக்கவும்.

வருஷசந்தா உள்நாடு ரூ. 1-8-0. வெளிநாடு ரூ. 2/- (3 ஷிலிங்.)

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய 54 நாவல்கள்.

ரூ. 2-8

வைதேகி
ராதாமணி
சாருலோசனா
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரூ. 2

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1-12

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

ரூ. 1-8

சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்

ரூ. 1-4

பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச்சுழல்
கஸ்தூரீதிலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
புகழ்மாலை

ரூ. 1

சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
கருணாலயம்

அணா 14

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணா 12

கதம்பமாலை *

அணா 10

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

அணா 8

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி
படகோட்டி

அணா 6

பக்ஷமாலிகா

அணா 4

மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸராஜன் *
உளுத்த இதயம்

ஜகன்மோகினி

The J.M.O Motto
USEFUL ENTERTAINMENT
SOCIAL SERVICE & REFORM

JAGANMOHINI

ESTD 1923
LEADING PUBLISHERS OF FAMOUS NOVELS

THE JAGANMOHINI OFFICE
JOURNALISTS, PUBLISHERS
BOOKSELLERS & PRINTERS
26, CAR STREET, TRIPLICANE, MADRAS.

TAMIL MONTHLY
POPULAR THE WORLD OVER WHEREVER TAMIL IS READ

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.